# Winmeen's

# 9 ஆம் வகுப்பு தமிழ்
# இரண்டாம் பருவம்
# பாடக்குறிப்புகள்

www.winmeen.com

## 9 ஆம் வகுப்பு தமிழ் – இரண்டாம் பருவம் - பாடக்குறிப்புகள்

### 1. கல்வியிற் சிறந்த பெண்கள்

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக எழுதுக**

1. வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர் யாருடைய அருள் வேண்டித் தொடங்குகிறார்?

அ) கலைமகள் **ஆ) தமிழ்மக்கள்** இ) முருகன் ஈ) விநாயகர்

2. சொந்தக் காலில் நின்றிட உடனுதவுவது ……………………

**அ) கல்வி** ஆ) செல்வம் இ) தொழில் ஈ) வலிமை

3. பக்தி இலக்கியம் பாடிய முதற்பெண்புலவர் ………………………

அ) ஆண்டாள் ஆ) ஔவையார் **இ) காரைக்கால் அம்மையார்** ஈ) மணிமேகலை

4. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் ……………………….

அ) இராமாமிர்தம் ஆ) இராஜேஸ்வரி இ) நீலாம்பிகை **ஈ) முத்துலெட்சுமி**

5. சாரதா சட்டம் என்பது ……………………….

அ) இருதாரத் தடைச் சட்டம் **ஆ) குழந்தைத் திருமணச் தடைச் சட்டம்**

இ) பெண் கல்விச் சட்டம் ஈ) பெண் சொத்துரிமைச் சட்டம்

**2. சிறுவினாக்கள்**

**1. வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர் பெண்கல்வியின் அவசியம் பற்றியும் கல்வியில் சிறந்த பெண்களைப் பற்றியும் எங்ஙனம் பாடத் தொடங்கினர்?**

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர், பெண்கல்வியின் அவசியம் பற்றியும் சிறந்த பெண்களைப் பற்றியும்,

படிக்க வேண்டும் பெண்ணே – அப்பத்தான்

பார்முழுதும் போற்றிடும் கண்ணே…

சுயமாகச் சிந்திக்கத் துணையாகும் கல்வி

சொந்தங்காலில் நின்றிடவே உடனுதவும் கல்வி

எனப் பாடத் தொடங்கினார்.

**2. சங்க காலப் பெண்பாற் புலவர்கள் சிலரைக் குறிப்பிடுக**

சங்க காலப் பெண்பாற் புலவர்கள்: ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைபாடினியார், வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

**3. சமயங்களோடு தொடர்புடையவர்களாய்ச் சிறந்த பெண்கள் யார்?**

சமண மதமும் புத்த மதமும் வளர்ந்த காலத்திலே, மாதவி மகள் மணிமேகலை கல்வி கற்ற பெண்ணாய்த்திகழ்ந்தாள். பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் முதலிய பெண்கள், தம் இறைவனுக்குப் பாமாலை சூட்டினார்கள்.

**4. நம் நாட்டில் பெண்ணடிமைத்தனம் வந்ததன் காரணத்தை வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர் எவ்வாறு பாடிவிளக்கினார்?**

'ஆணும் பெண்ணும் இயற்கைப் படைப்பிலே
சமம் என்று நினைச்சாங்க – முன்னோர்கள்
சரியாக வாழ்ந்தாங்க…
இடையில் குடிபுகுந்த மூடப்பழக்கங்களால்
பெண்களைத் தாழ்த்தினாங்க
சமத்துவத்தை
அடியோடு வீழ்த்தினாங்க' என வில்லுப்பாட்டுத் குழுத் தலைவர் பாடி விளக்கினார்.

**5. பெண்கல்வி மேம்பாட்டிற்கு ஆங்கில அரசு செய்த பணி யாது?**

1882இல் ஹண்டர் குழு முதன் முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது. அந்த அறிக்கையின்படி மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ் பூலே சாவித்திரிபாய் பூலே இணையர் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடக்கினார்கள்.

**6. வில்லுப்பாட்டுக் குழுவினர் எங்ஙனம் மங்களம் பாடிப் பெண் கல்வியைப் போற்றினர்?**

'வாழியவே பெண்மை வாழியவே

வளமான பெண்கல்வி வாழியவே

சமத்துவம் வாழியவே

புவி வளம் பெறவே

புதிய உலகம் நலம் பெறவே'

என வில்லுப்பாட்டுக் குழுவினர் பெண் கல்வியைப் போற்றி மங்களம் பாடினர்.

**7. நீலாம்பிகை அம்மையார் செய்த தமிழ்ப்பணிகள் யாவை?**

நீலாம்பிகை அம்மையார்: இவர், மறைமலையடிகளின் மகள். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்; இவருடைய தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல்-தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

**8. ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் பற்றிக் குறிப்பெழுதுக**

ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார்: இவர் தமிழ் இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாய்ப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

**9. சங்க காலத்தின் சிறப்பினை வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர் எங்ஙனம் பாடினார்?**

‘கற்காலம் முதலே கனிந்திருந்த தமிழன்
பொற்காலம் எனவே புகழப்படும் காலம்
எக்காலம்? அது எக்காலம்?
பாட்டும் தொகையும் உருவான காலம்
ஊட்டும் தமிழுணர்வு உயர்ந்திருந்த காலம்
சங்ககாலம்……… அது சங்ககாலம்…..
ஔவையும் குயத்தியும் வெளிபாடிய
கண்ணியும்
கொல்வைத் தமிழைக் கொண்டு பாடிய
மாசாத்தியும்
செழித்திருந்த காலம்………… புகழ் வளர்ந்திருந்த
காலம்…..’
எனச் சங்க காலத்தின் சிறப்பினை வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர் பாடினார்.

**10. பெண்கல்விக்குப் பாடுபட்டதால் நோபல் பரிசு பெற்ற பெண்களைப் பற்றிக் குறிப்பிடுக**

கைலாஷ் சத்யார்த்தி என்பவர் ‘குழந்தையைப் பாதுகாப்போம்’ என்ற அமைப்பினை நிறுவியுள்ளார். அதன் வழியே இதுவரை எண்பதாயிரம் குழந்தைகள் கல்விபெற்றுள்ளனர்.

2014இல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. பாகிஸ்தானில், பெண் கல்வியை வற்புறுத்தித் தமது பன்னிரண்டாம் வயதில் போராடிய மலாலா நோபல் பரிசு பெற்றுள்ளார்.

**11. டாக்டர் முத்து லெட்சுமி பற்றிக் குறிப்பெழுதுக**

டாக்டர் முத்து லெட்சுமி: இவர், தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்; இந்தியப் மேயர்; சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி;

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாய் இருந்தவர்; அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

**12. பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள், சாரதா சட்டம் பற்றி எழுதுக**

பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்:

ஈ. வெ.ரா – நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது. சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் – கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது.

சாரதா திட்டம்: பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

**13. பெண்களின் முன்னேற்றத்திற்குத் தந்தை பெரியார், பாரதியார், பாரதிதாசன் ஆற்றிய பங்கிளை ஓரிரு வரிகளில் எழுதுக.**

தந்தை பெரியார் : முடியாது பெண்ணாலே என்கின்ற மாயையினை முடக்க எழுந்தார்.

பாரதியார் : விடியாது பொண்ணாலே என்கின்ற கேலியினை மிதித்துத் துவைத்தார்.

பாரதிதாசன் : பெண்ணடிமை தீரும் வரை மண்ணடிமை தீராது என இடி முழக்கம் செய்தார்.

**14. எவை விளைய வேண்டும் எனக் குழுவினர் கூறுகின்றனர்?**

பெண்கள் படிக்க வேண்டும்; நாட்டின் கண்கள் திறக்க வேண்டும். பெண்கள் இன்னும் படிக்க வேண்டும்; உயர்வு என்றைக்கும் விளைய வேண்டும். ஆணும் பெண்ணும் சரிநிகர் என்னும் அறிவு வளர வேண்டும். உலகம் அன்பினாலே மலர்ச்சி பெறும் என்னும் உண்மை அனைவர்க்கும் புரிய வேண்டும் என வில்லுப்பாட்டுக் குழுவினர் கூறுகின்றனர்.

**15. மூவபலூர் இராமாமிர்தம், பண்டிதரமாபாய், ஐடாஸ் சோபியா ஸ்கட்டர், சாவித்திரிபாய் பூரே ஆகியோர் மகளிர் இனத்திற்கு ஆற்றியற்றைக் கூறுக**

(அ) மூவாலூர் இராமாமிர்தம் : தமிழகத்தின் சமுகச் சீர்தித்தவாதி; எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர்.

ஆ) பண்டித ரமாபாய் : இவர் சமூகத் தன்னார்வலர்; தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர்; பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

இ) ஐடாஸ் சோரியா ஸ்கட்டர்: பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் தமிழகத்திற்கு வந்து, மருந்துவராகி வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்.

ஈ) சாவித்திரிபாய் பூலே: 1848இல் பெண்களுக்கெனத் தொடக்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராய்ப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.

**இன்றைய சாதனைப் பெண்மணிகள்**

- இந்திய அரசினால் பாராட்டப்பட்டவர் சின்னப்பிள்ளை. தமிழ்நாட்டு அரசின் ஔவை விருது பெற்றவர். சுய உதவிக் குழுக்கள் மூலம் பெண்களுக்காகப் பாடுபடுவர்.
- கைத்தறி நெசவு சாதனை செய்ததற்காகக் காஞ்சிபுரம் மகேஸ்வரி (58), பார்வதி (38) ஆகிய இருவரும் 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய விருது பெற்றுள்ளனர்.
- உலக அளவில் நடந்த போட்டியில் பெப்சிகோ நிறுவனத்தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இந்திரா லூயி.
- அருந்ததி பட்டாச்சார்யா (58) ஸ்டேட் வங்கியின் முதன்மைப் பதவியில் இருக்கிறார்.
- கிரண் மஜீம்தார் (61) புற்று நோய் மருந்து நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்.
- சிகா சர்மா (58) ஆக்ஸிஸ் வங்கியின் தலைவர்.
- அகிலா – ஸ்ரீராம் நிதி நிறுவனத்தின் தலைவர்

## கவிதை பேழை

## குடும்ப விளக்கு

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. பாரதிதாசன் இயற்றிய ………………… நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

அ) அழகின் சிரிப்பு ஆ) குடும்ப விளக்கு

இ) பாண்டியன் பரிசு **ஈ) பிசிராந்தையார்**

2. மாக்கடல் என்பதற்கு இலக்கணக் குறிப்பு யாது?

**அ) உரிச்சொல் தொடர்** ஆ) பெயரெச்சத் தொடர்

இ) பண்புத் தொகை ஈ) வினையெச்சத் தொடர்

3. ‘மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடம் வேண்டுமம்மா’ எனப் பாடியவர் …………………………

**அ) கவிமணி** ஆ) நாமக்கல்லார்

இ) பாரதி ஈ) பாவேந்தர்

4. ………………………… இல்லாத பெண்கள் களர் நிலம்

அ) அழகு ஆ) அன்பு

**இ) கல்வி** ஈ) செல்வம்

**2. சிறுவினாக்கள்**

**1. கல்வியில்லாத பெண்களும் கல்வி கற்ற பெண்களும் எவற்றைப் போன்றவர்கள்?**

கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலானவை விளையலாம்; நல்ல பயிர் விளையாது. அதுபோல, கல்வியறிவு இல்லாத பெண்கள் வாயிலாக அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள். கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர்.

**2. பெண்களுக்கு விடுதலை பறிபோனது ஏன் எனத் தலைவி கூறுகிறாள்?**

வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது எனத் தலைவி கூறுகிறாள்.

**3. பெண்கள் இந்நாளில் செய்ய வேண்டியவை யாவை?**

இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும் அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும். மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவள் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள்.

**4. ஆண்களுக்கு வரவேண்டிய எண்ணம் யாது?**

'சமைப்பது வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது. அவை நமக்கும் உரியவை' என்று ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் வரவேண்டும்.

**5. எச்செயலால் வாழ்வு நலம் பெறுகிறது?**

உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். 'வாழ்க்கை' என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று. அடுப்பில் உள்ள சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போமு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம் பெறுகிறது.

**6. தமிழ் நாட்டில் இருக்கும் தீய வழக்கம் யாது? அதனை நீக்க என்ன செய்ய வேண்டும் ?**

'சமைக்கும் பணி, பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை. அப்பணி நல்ல தாய்மார்களுக்கே உரியது' எனத் தமிழ்நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

**7. பெண்விடுதலையின் இன்றியமையாமைக் குடும்ப விளக்குத் தலைவி எங்ஙனம் எடுத்துரைக்கிறாள்?**

'வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது. இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும் அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும். மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவர் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் சொல்வேன்' எனக் குடும்ப விளக்குத் தலைவி கூறுகிறாள்.

**8. சமைக்கும் பணியின் சிறப்பை விளக்குக**

'சமைப்பது வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை' எனறு கூறுவது பொருத்தமற்றது. 'அவை நமக்கும் உரியவை' என்று ஆண்கள் ஏற்றுக் கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாளைக் காண்போம். சமைப்பது தாழ்வென எண்ணலாமா? சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை; அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார்.

உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். 'வாழ்க்கை' என்பது பொருட்செல்வத்தாலோ அமைவதன்று. அடுப்பில் உள்ள சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போமு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம் பெறுகிறது.

**9. பாரதிதாசன் பற்றிக் குறிப்பு வரைக**

பாரதிதாசனின் இயற்பெயர் கனக. சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதை மீது கொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவருடைய படைப்புகள். இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது. காலம்: இருபதாம் நூற்றாண்டு

**10. குடும்ப விளக்கு – நூலின் அமைப்பை விளக்குக**

இயற்கையைப் போற்றுதல், தமிழுணர்ச்சி ஊட்டுதல், பகுத்தறிவு பரப்புதல், பொதுவுடைமை பேசுதல், விடுதலைக்குத் தூண்டுதல், பெண்கல்வி பெறுதல் போன்ற பாடுபொருள்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று பாவேந்தர் பாரதிதாசனின் குடும்ப விளக்கு.

குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதைக் குடும்ப விளக்கு உணர்த்துகிறது; கற்ற பெண்ணின் குடும்பமே கல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது. குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி இன்றியமையாதது எனக் கூறும் இந்நூல் ஐந்து பகுதிகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளது.

**<u>இலக்கணக் குறிப்பு</u>**

இல்லாத - எதிர்மறைப் பெயரெச்சம்

| | | |
|---|---|---|
| களர் நிலம் | - | இரு பெயரொட்டுப் பண்புத் தொகை |
| விளைதல் | - | தொடிழிற்பெயர்கள் |
| நல்லறிவு, நானிலம், நன்னாள் | - | பண்புத்தொகைகள் |
| வான் ஊர்தி | - | 7 ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| மாக்கடல் | - | உரிச்சொல் தொடர் |
| அனைவர்க்கும் | - | முற்றும்மை |
| பொன்னே போல் | - | உவம உருபு |
| மலர்க்கை | - | உவமைத் தொகை |
| இயற்றுக | - | வியங்கோள் வினைமுற்று |
| இல்லா, ஒணா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் |
| மின்னாள் | - | பெண்பால் எதிர்மறை வினைமுற்று |
| உரைப்பேன் | - | தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்று |
| காண்போம், வாழ்வோம் | - | தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று |
| சமைக்கின்றார் | - | பலர்பால் நிகழ்கால வினைமுற்று |
| வில்வாள் | - | உம்மைத் தொகை |
| இட்டு | - | இறந்தகால வினையெச்சம் |
| வேண்டும் | - | செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று |

**பகுபத உறுப்பிலக்கணம்**

| | | |
|---|---|---|
| இல்லாத | : | **இல் + ல் + ஆ + த் + அ**<br>இல் – பகுதி; ல் - சந்தி; ஆ – எதிர்மறை இடைநிலை<br>த் – எழுத்துப் பேறு; அ – பெயரெச்ச விகுதி |
| விளைதல் | : | **விளை + தல்**<br>விளை – பகுதி; தல் – தொழிற் பெயர் விகுதி |

திருந்திய : **திருந்து + இ(ன்) + ய் + அ**

திருந்து - பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ன் - கெட்டது;

ய் – உடம்படுமெய் சந்தி; அ – பெயரெச்ச விகுதி

விளைவது : **விளை + வ் + அ + து**

விளை – பகுதி ; வ் – எதிர்கால இடைநிலை; அ - சாரியை;

து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

அளத்தல் : **அள + த் + தல்**

அள - பகுதி; த் - சத்தி; தல் – தொழிற் பெயர் விகுதி

போனது : **போ + இ(ன்) + அ + து**

போனது - பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; இ - கெட்டது;

அ - சாரியை; து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

இயற்றுக : **இயற்று + க**

இயற்று - பகுதி; க – வியங்கோள் வினைமுற்று விகுதி

காண்போம் : **காண் + ப் + ஓம்**

காண் – பகுதி; ப் – எதிர்கால இடைநிலை;

ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

சமைக்கின்றார் : **சமை + க் + கின்று + ஆர்**

சமை - பகுதி; க் - சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

இட்டு : **இடு (இட்டு) + உ**

இடு – பகுதி; இட்டு – ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது;

உ – வினையெச்ச விகுதி

வாழ்வோம் : **வாழ் + வ் + ஓம்**

வாழ் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;

ஓம் – தன்மைப்பன்மை வினைமுற்று விகுதி

ஆக்கல் : **ஆக்கு + ஆல்**

ஆக்கு - பகுதி; அல் – தொழிற்பெயர் விகுதி

**பெண்மையைப் போற்றும் கவிதை அடிகள்**

*பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்* **- பாரதி**

*மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்*
*செய்திடம் வேண்டும்* **- கவிமணி**

*பெண் எனில் பேதை என்ற எண்ணம்*
*இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்*
*உருப்படல் என்பது சரிப்படாது.* **- பாவேந்தர்**

*அன்பும் ஆர்வமும் அடக்கமும் சேர்ந்தும்*
*உண்மைத் தன்மையும் உறுதியும் மிகுந்தும் தன்னல மறுப்பும் சகிப்புத் தன்மையும்*
*இயல்பாய் அமைந்தும் இன்பச் சொரூபமாய்த்*
*தாயாய் நின்று தரணியைத் தாங்கும்.*
*தாரமாய் வந்து தளர்வைப் போக்கும்.* **- நாமக்கல் கவிஞர்**

*பெண்ணிற் பெருந்தக்க யாவுள?* **- திருவள்ளுவர்**

## சிறுபஞ்சமூலம்

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுக**

1. 'பதினெண் கீழ்க்கணக்கு' – கணக்கு என்பதன் பொருள்

அ) கணிதம் **ஆ) நூல்**

இ) புள்ளி விவரம் ஈ) வாய்பாடு

2. 'சிறுபஞ்சமூலம்' – மூலம் என்பதன் பொருள்

அ) அடிப்படை ஆ) ஆதாரம்

இ) விழுது **ஈ) வேர்**

3. 'சிறுபஞ்சமூலம்' – எப்படிப் பிரியும்?

**அ) சிறுமை + பஞ்ச + மூலம்** ஆ) சிறுமை + பஞ்சம் + மூலம்

இ) சிறுபஞ்சம் + மூலம் ஈ) சிறு + பஞ்சமூலம்

4. சிறுபஞ்ச மூலம் இயற்றியவர்

அ) கணிமேதாவியார் **ஆ) காரியாசான்**

இ) நப்பூதனார் ஈ) மாக்காயனார்

5. ஒரு பாடலில் மூன்று கருத்துகளைக் கொண்ட அறநூல் எது?

அ) ஏலாதி **ஆ) திரிகடுகம்**

இ) நாலடியார் ஈ) பழமொழி

6. ஒரு பாடலில் ஆறு கருத்துகளைக் கொண்ட அறநூல் எது?

**அ) ஏலாதி** ஆ) திரிகடுகம்

இ) நாலடியார் ஈ) நான்மணிக்கடிகை

## 2. சிறுவினாக்கள்

### 1. பூவாது காய்க்கும் மரம் உள – இத்தொடர் மூலம் உணர்த்தப்படும் கருத்து யாது?

'பூவாது காய்க்கும் மரம் உள' என்னும் தொடர் மூலம் உணர்த்துப்படும் கருத்து: பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு, இதைப்போலவே நன்மைகளை நன்குணர்ந்தவர் வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார்.

### 2. விதையாமை நாறுவ வித்து உள – இத்தொடர் மூலம் உணர்த்தப்படும் கருத்து யாது?

விதையாமை நாறுவ வித்து உள – இத்தொடர் மூலம் உணர்த்தப்படும் கருத்து: பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையர் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்துகொள்வர்.

### 3. 'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் செய்யுளின் உட்கருத்து யாது?

'பூவாது காய்க்கும்' எனத் தொடங்கும் செய்யுளின் உட்கருத்து:

வயதுக்கும் அறிவுக்கும் சில நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை. சாதனைக்கு வயது தடையில்லை.

### 4. சாதனைக்க வயது தடையில்லை என்பதற்குச் சான்றுகள் தருக?

10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும் பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார். 11 ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார். 15 ஆவது வயதிலேயே பிரஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.

16 ஆவது வயதிலேயே தம் தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர். 17 ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்தவர் அறிவியலாளர் கலீலியோ.

**5. சிறுபஞ்சமூலம் இயற்றிய ஆசிரியர் பற்றிக் குறிப்பு வரைக**

சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான். இவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். கார் என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர். மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

**6. சிறுபஞ்ச மூலம் – குறிப்பு வரைக**

தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண்கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவன. இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான்.

**7. 'பூவாது காய்க்கும்' எனத்தொடங்கும் சிறுபஞ்சமூலச் செய்யுளில் அமைந்திருக்கும் ஐந்து கருத்துகளை எழுதுக**

1. பூக்காமலே காய்க்கின்ற மரங்கள் உண்டு.

2. நன்மையை அறிபவர் வயதினால் இளையவராக இருந்தாலும் மூத்தவரோடு வைத்து எண்ணத்தக்கவரே ஆவார்.

3. பலநூல்களைக் கற்றறிந்த இளைஞர்களும் மூத்தவரோடு சமமாக எண்ணத்தக்கவரே.

4. பாத்திகட்டி விதைக்காமலே முளைக்கின்ற விதைகள் உண்டு.

5. பிறர் எடுத்துச் சொல்லாமலேயே, அறிவாளிகளுக்குத் தாங்கள் செய்ய வேண்டியவற்றைப் பற்றிய உணர்வு தோன்றும்.

**8. 'பூவாது காய்க்கும்' என்னும் செய்யுளில் அமைந்த அணி யாது ?**

இச்செய்யுளில் எடுத்துக்காட்டு உவமை அணி உள்ளது.

அணி இலக்கணம்: ஒரு செய்யுளில் உவமை ஒரு தொடராகவும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைய, அவற்றுக்கு இடையே உவமை உருபு மறைந்து வருமானல் அது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

விளக்கம்: இச்செய்யுளில் 'பூவாது காய்க்கும் மரம் உள' என்பது உவமை. 'நன்று அறிவார் மூவாது மூத்தவர்' என்பது உவமேயம். இவற்றுக்கு இடையே அது போல என்னும் உவம உருபு மறைந்து வந்துள்ளது. 'தாவாவிதையாமை நாறுவ வித்து உள' என்பது உவமை. மேதைக்கு உரையாமை உணர்வு செல்லும் என்பது உவமேயம். இவற்றுக்கு இடையே அதுபோல என்னும் உவமை உருபு மறைந்து வந்துள்ளது.

இச்செய்யுளில் எடுத்துக்காட்டு உவமை அணி இரண்டு இடங்களில் அமைந்துள்ளது.

**இலக்கணக் குறிப்பு**

| | | |
|---|---|---|
| அறிவார், வல்லார் | - | வினையாலணையும் பெயர்கள் |
| விதையாமை, உனரயாமை | - | எதிர்மறைத் தொழிற்பெயர்கள் |
| தாவா | - | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| பூவாது, மூவாது | - | எதிர்மறை வினையெச்சங்கள் |
| உள | - | பலவின்பால் வினைமுற்று |
| செல்லும் | - | செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று |

**பகுபத உறுப்பிலக்கணம்**

உரையாமை : **உரை + ய் + ஆ + மை**

உரை – பகுதி; ய் – சந்தி (உடம்படுமெய்)

ஆ – எதிர்மறை இடைநிலை; மை – தொழிற்பெயர் விகுதி

காய்க்கும் : காய் + க் + கு + உம்

காய் – பகுதி; க் - சந்தி; கு - சாரியை;

உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு விகுதி எதிர்காலம் காட்டியது.

பூவாது : **பூ + வ் + ஆ + த் + உ**

பூ - பகுதி; வ் – உடம்படுமெய் சந்தி;

ஆ – எதிர்மறை இடைநிலை;

த் – எழுத்துப்பேறு; உ – வினையெச்ச விகுதி

விதையாமை : **விதை + ய் + ஆ + மை**

விதை - பகுதி; ய் – உடம்படுமெய் சந்தி;

ஆ – எதிர்மறை இடைநிலை; மை – தொழிற்பெயர் விகுதி

செல்லும் : **செல் + ல் + உம்**

செல் - பகுதி; ல் - சந்தி;

உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு விகுதி எதிர்காலம் காட்டியது

1. பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள் எவையெனக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக

பூக்காமலே காய்க்கும் மரங்கள் : அத்தி, பலா

விதைக்காமலே முளைக்கும் விதை : அறுகம்புல், குப்பைமேனி

2. மூவாது மூத்தவர், காணாது கண்டவர் – இவை போல நயம் அமைந்த தொடர்களை உருவாக்குக

சொல்லாமல் சொன்னவர், நினைக்காமல் நினைப்பவர், பேசாமல் பேசியவர்.

## வீட்டிற்கோர் புத்தகசாலை

**அண்ணாவின் வானொலி உரை:**

நாட்டு நிலையானது உலக நிலைக்குத் தக்கபடி வளர வேண்டும். அதற்கு அடிப்படையாக வீட்டுநிலை அமைய வேண்டும். அதற்குவழி வீட்டிற்கோர் புத்தகசாலை இருப்பதே ஆகும். கல்வி பெற்றவர்கள் அனைவரும் மனவளம் உடையவராய் விளங்க வேண்டும் எனில் வீட்டிற்கோர் புத்தகசாலை வேண்டும்.

வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும்; பீரோக்கள் இருக்கும்; அவைகளில் வெள்ளித் தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச்செம்பும் இருக்கும்; பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும்; உடைகள் சிறுகடைகள் அளவுக்கு இருக்கும்; மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு இருக்கும் அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூட புத்தகசாலை இராது.

உணவு, உடை, அடிப்படைத் தேவை அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விசேஷங்களின்போது வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும்போது ‘புத்தகங்கள் வாங்குவது’ என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள

வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக்கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தகசாலையை அமைத்துவிடலாம். உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும்.

பூகோள, சரித ஏடுகள் இருக்க வேண்டும். நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்கவேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கியச் சாரத்தைச் சாமானியரும் அறிந்து வாசிக்கக் கூடிற முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்க வேண்டும். குறைந்தபட்சம் மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல்கள் இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலைதேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும்.

1. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம்

புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும் - அறிஞர் அண்ணா

உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே! - கதே

1. புத்தகமே நல்ல துணைவன்

2. புத்தகம் தருவது புத்தகமே

(1. புதுமனம் 2. நூல்)

3. ஒரு நூலகத்தைத் திறப்பது ஒரு சிறைச்சாலையை மூடுவதற்குச் சமம்.

4. ஒரு வீட்டில் சன்னல் இல்லாமல் போகலாம்.

ஆனால் ஒரு நூலகம் இல்லாமல் போகக் கூடாது.

5. புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டின்

புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும் – பாரதிதாசன்

**2. சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் ஒன்பதாம் நாள், தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுவதன் காரணத்தை அறிக**

**இந்திய நூலக அறிவியலின் தந்தை**

நூலகங்களை நிர்வகிப்பது மிகச் சிறந்த ஆற்றல்; திறமைவாய்ந்த பொறுப்பு. தகவல் சார் அறிவியலாக இதை மாற்றியவர் நூலகவியல் மேதை சீர்காழி. இரா. அரங்கநாதன். இவர் பிறந்த நாள் 9.8.1892 இவர் நூலகத்தில் புத்தகங்களை அடுக்குவதில் 'கோலன்நூல் பகுப்பு முறை' யை 1933 இல் அறிமுகப்படுத்தினார். அதனால் 'இந்திய நூலாக அறிவியலின் தந்தை' எனப் போற்றப்படுகிறார். அவர் பிறந்த நாளான ஆகஸ்டு ஒன்பது தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுகிறது.

## இடைச்சொல், உரிச்சொல்

### இடைச்சொல்

**1. இடைச்சொற்கள் ஆவன யாவை?**

இடைச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல.

**2. இடைச்சொற்களின் வகைகளைப் பட்டியலிடுக**

**இடைச்சொற்களின் வகைகள்**

| | |
|---|---|
| வேற்றுமை உருபுகள் | ஐ, ஆல், கு, இன், அது, கண் |
| பன்மை விகுதிகள் | கள், மார் |
| திணை, பால் விகுதிகள் | ஏன், ஒம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, அ |
| கால இடைநிலைகள் | கிறு, கின்று……… |
| பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் | அ, உ,இ,மல்………. |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தொழிற்பெயர் விகுதிகள் | தல், அல், மை………. |
| வியங்கோள் விகுதிகள் | க, இய, …………… |
| சாரியைகள் | அத்து, அற்று, அம்…… |
| உவம உருபுகள் | போல, விட, காட்டிலும், மாதிரி |

| | |
|---|---|
| இணைப்பிடைச் சொற்கள் | உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும் .......... |
| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் | உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம், |
| சொல்லுருபுகள் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி,வரை |
| வினா உருபுகள் | ஆ, ஓ |

**3. இக்காலத்தில் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் இடைச்சொற்கள் யாவை?**

உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்கள் இக்காலத் தமிழில் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**4. உம் என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருள்களில்வரும். இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக**

'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை. (எதிர்மறை உம்மை)

பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு)

**5. ஓகார இடைச்சொல் எவ்வெப்பொருள்களில் வருகிறது? சான்றுகள் தருக**

ஓகார இடைச்சொல் ஒலியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.

இக்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது. அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை. மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை – அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றது.

இன்றைக்கு மழை பொய்யுமோ? (ஐயம்)

பூங்கொடியோ மலர்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)

பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை – அதுவும் இல்லை)

**6. ஏகார இடைச்சொல் எவ்வெப்பொருள்களில் வரும்?**

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

இக்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

அண்ணல் காந்தி அன்றே சொன்னார். நடந்தே வந்தான்.

**7. தான் என்னும் இடைச்சொல் எப்பொருளில் வருகிறது?**

'தான்' என்னும் இடைச்சொல் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்றுத்தான் விழாவில் பாடினாள்

நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்

வேறுபாட்டை உணருங்கள்:

நிர்மலாதான் பாடினாள். (தான் – இடைச்சொல்)

நிர்மலா தானும் பாடினாள்.

(தான் – தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர்)

**8. 'மட்டும்' என்னும் இடைச்சொல் எப்பொருளில் பயன்படுத்தப்படுகிறது?**

இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது. படிப்பு மட்டும் இருந்தால் போதும் (வரையறைப் பொருள்)

**9. 'ஆவது' என்னும் இடைச்சொல்லின் பயன்பாட்டினை எழுதுக?**

இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.

ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)

அவனாவது, இவனாவது செய்து முடிக்கவேண்டும். (இது அல்லது அது)

முதலாவது, இரண்டாவது. (வரிசைப்படுத்தல்)

**10. 'கூட' என்பது எவ்வெப் பொருள்களில் வருகின்றது?**

என்னிடம் ஒரு காசுகூட இல்லை (குறைந்தபட்சம்)

தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை. (முற்றுப்பொருள்)

அவனுக்கு வரையக்கூட தெரியும். (எச்சம் தழுவிய கூற்று)

**11. ‘ஆ’ என்னும் இடைச்சொல் எப்பொருளில் வரும்?**

‘ஆ’ என்பது வினாப் பொருளில் வரும் இடைச்சொல்லாகும்.

ஆ என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?

புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?

**12. ‘ஆம்’ என்பது எப்பொருள்களில் வருகின்றது?**

‘ஆம்’ என்பது சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

உள்ளே வரலாம். (இசைவு)

இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்/செய்தி)

பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம் (வதந்தி/பொய்ம்மொழி)

## உரிச்சொல்

**1. உரிச்சொற்களின் பயன்பாடுகள் யாவை?**

உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்களில் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையது. ஆனால் இது தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச்சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூல் கூறுகிறது.

**2. உரிச்சொல்லின் வகைகளை விளக்குக**

அ) பலபொருள் குறித்த ஓர் உரிச்சொல். கடி என்பது மணம், காவல், விரைவு, கூர்மை முதலிய பொள்களில் வரும்.

எ.கா: கடி மலர் – மணம் மிக்க மலர்

கடி நகர் – காவல் மிக்க நகர்

கடி விடுதும் – விரைவாக விடுவோம்

கடி நுனி – கூர்மையான நுனி

ஆ) ஒரு பொருள் குறித்த பல உரிச்சொற்கள்.

உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன. உறு பசி; தவச் சிறிது; நனி நன்று

**1. பத்திகளில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக**

அ) பெண்ணடிமை போக வேண்டும்; பெண், கல்வி, பெற வேண்டும். பெண்கள் படித்தால்தான் தம் சொந்தக் காலில் நிற்கலாம். பெண் கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு

ஆ) நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோராத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகபடுத்தும் வழிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

**விடை: அ) தான், ஆம், ஆல், உம், இன்**

**ஆ) விட, இன், இல், கு, கொண்டு, ஐ, உம், விட**

2. உம், ஒ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக

| | | |
|---|---|---|
| உம் | : | அஜித்தும் மஜீத்தும் வந்தனர். |
| ஓ | : | அவர் வருவாரோ? |
| ஏ | : | நானே செய்வேன் |
| தான் | : | நீதான் பாராட்ட வேண்டும் |
| மட்டும் | : | தமிழரசிமட்டும் பாடினாள் |
| ஆவது | : | நாங்கள் ஒன்பதாவது வகுப்பில் படிக்கிறோம் |
| கூட | : | மழை கூட ஒருநாளில் தேன் ஆகலாம் |
| ஆ | : | நான்சி பேசினாளா? |
| ஆம் | : | நாளை தேர்வுமுடிவு வெளிவரலாம் |

3. பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக

அ) மணற்கேணி**யை**ப்போல் விளங்கும் நூல்**தான்** உறுதுணை **என** இருக்கிறது

ஆ) பெண்க**ளைப்** படிக்க வைக்காத காலத்**திலும்** பெண் இனத்திற்கும் பெருமை சேர்க்கும்படி நம் முத்துலெட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்து**வராய்** வந்தார்கள்.

இ) மக்க**ளின்** மன**த்திலே** உலக அறிவுபுக வழி செய்யவேண்டும்.

4. இணைத்து எழுதிப் பாருங்கள்

(i).

தான்

அவன் உம் மனிதன்

ஏ

இயற்கை ஆ அழகு

ii)

மட்டும்

உனக்கு கூட தெரியுமா?

ஆவது

**தெரியும்**

வீடு, நமதே

நாடு

காற்று, **தேவை**

உம்

வெளிச்சம்

ஒ

அன்பு, **வேண்டும்**

அமைதி

வான்மதி, **வாருங்கள்**

பானு

i) அ) அவன் தான் மனிதன், அவனும் மனிதன், அவனே மனிதன், அவனா மனிதன்?

ஆ) இயற்கைதான் அழகு, இயற்கையும் அழகு, இயற்கையே அழகு, இயற்கையா அழகு?

ii) அ) உனக்கு மட்டும் தெரியுமா? உனக்குக்கூட தெரியுமா? உனக்காவது தெரியுமா?

ஆ) உனக்கு மட்டும் தெரியும். உனக்குக் கூட தெரியும்? உனக்காவது தெரியும்.

iii) அ) வீடும் நாடும் நமவே. காற்றும் வெளிச்சமும் தேவை

அன்பும் அமைதியும் வேண்டும். வான்மதியும் பானுவும் வாருங்கள்

ஆ) வான்மதியோ பானுவோ வாருங்கள்

**5. பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக**

அ) **மா**பெரும் பொதுக் கூட்டம் (கடி, மா)

ஆ) **கடி**விடுதும் (உறு, கடி)

இ) **வாள்**நுதல் (வாள், தவ)

ஈ) **சாலச்**சிறந்தது (சால, மழ)

உ) **கடி**மனை (கடி, தட)

**1. 'தான்' என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?**

'தான்' என்னும் இடைச்சொல் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.

சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.
நிர்மலா நேற்றுத்தான் விழாவில் பாடினாள்
நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்
நிர்மலா தானும் நேற்று விழாவில் பாடினாள்.

**வேறுபாட்டை உணருங்கள் :**

நிர்மலாதான் பாடினாள். (தான் – இடைச்சொல்)

நிர்மலா தானும் பாடினாள்.

(தான் – தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர்)

**2. அவர்களுக்கு பரிசு தருவேன் – இத்தொடரில் 'ஆ' என்னும் இடைச் சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க**

1. அவர்களுக்கா பரிசு தருவேன்?
2. அவர்களுக்குப் பரிசா தருவேன்?
3. அவர்களுக்குப் பரிசு தருவேனா?

**3. செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம் பெறுகின்றன?**

செய்யுளில் உரிச்சொற்கள், அச்சம், அழகு, இசை, இயல்பு, இளமை உயர்பு, உவகை, ஒளி, கூர்மை, சிறப்பு, சினம், சுழற்சி, தனிமை, துணிவு, தொகுதி, நடுக்கம், நிறம், நிறைவு, நுட்பம், பகை, பயன், புகழ், புதிது, பெருமை, மிகுதி, மென்மை, வலிமை, வளம், வளைவு, வறுமை, வியப்பு, விரைவு, விளையாட்டு முதலிய பொருள்களில் இடம் பெறுகின்றன.

**4. இக்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக**

இரு – பெருமை. இருந்தமிழ்

தீம் – இனிமை. தீந்தமிழ்

**5. 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை எழுதுக**

'ஆ' என்பது வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்

'ஆ' என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?

புகழேந்தி நேற்று உன்னுடனா பேநினான்?

**6. இடைச் சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க**

**அ) வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?**

வீட்டுக்குச் செல்வதற்கா இவ்வளவு பீடிகை?

**ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.**

இந்தச் சூழ்நிலையை மாற்றியாக வேண்டும்.

**இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.**

வானூர்தியைச் செலுத்துதலும், உலகொடு கடலை அளத்தலும் போன்ற எந்த செயலும் ஆண்பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

**ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா?**

சமைப்பதையா தாழ்வென எண்ணுவது?

**உ) பூக்காமலே சில மரங்களில் காய் உண்டாவது உண்டு.**

பூக்காமல் சில மரங்களில் காய் உண்டாவதும் உண்டு.

**ஊ) வாளால் வெட்டினான்.**

வாளால்தான் வெட்டினான்

## பகுபத உறுப்பிலக்கணம்

**1. பகுபத உறுப்புகள் எத்தனை ? அவை சொற்களில் எவ்வாறு இடம் பெறும் ? அவற்றின் பயன்பாடு யாவை? என்பவதற்றைப் பட்டியலிடுக**

பகுபத உறுப்புகள் **ஆறு** வகைப்படும்.

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும் |
| விகுதி (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| சந்தி | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்: பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலையில் வரும். |

| | |
|---|---|
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும், பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| விகாரம் | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

**2. விகுதிகளை வரிசைப்படுத்துக**

| | |
|---|---|
| ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஒம் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு |

**3. இடைநிலைகளைக் குறித்து எழுதுக**

| | |
|---|---|
| இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |

| | |
|---|---|
| எதிர்கால இடைநிலைகள் | இல், அல், ஆ |
| எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

**4. சந்தி எழுத்துகளின் வகை பற்றி எழுதுக**

அ) சந்தி எழுத்துகள் – க், ச், த், ப்

ஆ) உடம்படுமெய் சந்தி எழுத்துகள் – ய், வ்

**5. சாரியைகள் யாவை?**

சாரியைகள் : அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன்.

**6. எழுத்துக் பேறு என்பது யாது? எடுத்துக்காட்டுத் தருக**

பகுபத உறுப்புபளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் எது எழுத்துப்பேறு.

எ.கா: ஓடாத

ஓடு + ஆ + த்+ அ. ஓடு – பகுதி; ஆ – எதிர்மறை இடைநிலை; த் - எழுத்துப்பேறு; அ – பெயரெச்ச விகுதி.

(ஆ என்னும் எதிர்மறை இடைநிலையயை அடுத்துவரும் 'த்' எழுத்துப்பேறு எனப்படும்)

<u>**மதிப்பீடு**</u>

**1. பொருத்தமான விடையைத் தேர்வு செய்க**

| | | |
|---|---|---|
| அ) சிறுபஞ்சமூலம் | - | 1. காப்பிய இலக்கியம் |
| ஆ) குடும்ப விளக்கு | - | 2. சங்க இலக்கியம் |
| இ) சீவகசிந்தாமணி | - | 3. அற இலக்கியம் |
| ஈ) குறுந்தொகை | - | 4. தற்கால இலக்கியம் |

**க) அ - 3, ஆ – 4, இ – 1, ஈ – 2** உ) அ – 2, ஆ – 3, இ – 1, ஈ – 4

ங) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2 ச) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3

**2. மாறுபாட்டுள்ள குழுவினைக் கண்டறிக**

அ) கலைக்கூடம் திரையரங்கம் ஆடுகளம் அருங்காட்சியகம்

**விடை: ஆடுகளம்**

ஆ) கடி உறு கூர் கழி

**விடை: கடி**

இ) வினவினான் செப்பினான் உரைத்தான் பகர்ந்தான் (பகன்றான் என்பது பிழை)

**விடை: வினவினான்**

ஈ) இன் கூட கிறு அம்பு

**விடை: அம்பு**

**3. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?**

அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.

ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?

**இ) எண்னனண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!**

ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக

**4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க**

அ) 'ஆ' என்பது உதிர்மறை இடைநிலை

ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.

இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்

1. ஆ, இ, சரி; அ தவறு ஆ) அ, இ, சரி; ஆ தவறு

3. மூன்றும் சரி ஈ) மூன்றும் தவறு

**5. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?**

அ) பெயரெச்சம் உவமைத்தொகை

ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்

இ) வினையெச்சம், உவமை

**ஈ) எதிர்மறை வினையெச்சம் உவமைத்தொகை**

**சிறுவினாக்கள்**

**1. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடு பொருள் யாது?**

தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள்: சமைக்கும் பணி, பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும் அப்பணி நல்ல தாய்மார்களுக்கே உரியது எனவும் தமிழ்த்திரு நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

**2. மூவாது மூத்தவர், நூல் வல்லார் – இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக**

பூக்காமலே காய்க்கின்ற மரங்கள் உண்டு. அதுபோல, நன்மையை அறியும் அறிவுடையவர் வயதில் இளையவராக இருந்தாலும் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவர். பல நூல்களைக் கற்றறிந்த இளைஞர்களும் மூத்தவரோடு சமமாக எண்ணத் தக்கவரே ஆவர்.

**3. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது.**

பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாய் இருந்தது குழந்தைத் திருமணம் அதைத் தடுக்க 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் இயற்றப்பட்டது.

**4. சங்காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக**

சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் சிலர்: ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைபாடினியார், வெள்ளி வீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

**5. பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?**

ஆண்கள் சமைப்பது தாழ்வல்ல. சமைப்பது தங்களுக்கும் உரியது என ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் நாளே நன்னாள்; அந்த நாளைக் காண்போம் எனப் பாவேந்தர் கூறுகிறார்.

**6. விதைக்காமலே முளைக்கும் விதைகள் – இத்தொடரின் வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.**

பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையர் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்துகொள்வர்.

**7. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக**

இவர், தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்; இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்; சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர்; சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி;

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதாரத் தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாய் இருந்தவர்; அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

**8. நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக**

இவர், மறைமலையடிகளின் மகள். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்; இவருடைய 'தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் – தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர்' ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

**இந்திய முதல் சாதனைப் பெண்மணிகள்**

| | |
|---|---|
| (முதல் பெண்) தலைமையமைச்சர் | இந்திரா காந்தி |
| (முதல் பெண்) ஆளுநர் | சரோஜினி நாயுடு |
| (முதல் பெண்) முதல் மந்திரி | சுஜாதா கிருபாளனி |
| (முதல் பெண்) முதுகலைப் பட்டதாரி | சந்திரமுகி போசு |
| (முதல் பெண்) வழக்கறிஞர் | ரெஜினா குஹா |
| (முதல் பெண்) மருத்துவப் பட்டதாரி | முத்துலட்சுமி ரெட்டி |
| (முதல் பெண்) உயர்நீதி மன்ற நீதிபதி | அன்னா சாண்டி |
| (முதல் பெண்) சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி | பாத்திமா பீவி |
| (முதல் பெண்) மேயர் | சுலோச்சனா மோடி |
| (முதல் பெண்) இந்தியத் தூதுவர் | விசயலட்சுமி பண்டிட் |
| (முதல் பெண்) இந்தியராணுவ உயர்ந்த சேனா விருது பெற்றவர் | விமலா தேவி |
| (முதல் பெண்) ஐ.பி.எஸ் | கிரண்பேடி |
| (முதல் பெண்) கண்பார்வையற்ற உச்சநீதிமன்ற வழக்கறிஞர் | அஞ்சலி |

| | |
|---|---|
| (முதல் பெண்) அரசு பேருந்து ஓட்டுநர் | வசந்தகுமாரி |
| (முதல் பெண்) வாகன ஆய்வாளர் | ஜெயகௌரி |
| (முதல் பெண்) விண்வெளி வீரர் | கல்பனா சாவ்லா |
| (முதல் பெண்) இரயில் ஓட்டுநர் | சுரேகா சங்கர் |
| (முதல் பெண்) தமிழக விவசாய விஞ்ஞானி | உஷா மேத்தா |
| (முதல் பெண்) விரல் ரேகைப் பிரிவுத்துறை இயக்குநர் | பிரகதாம்பாள் |
| (முதல் பெண்) (தமிழர்) சுதந்திரப் போரில் சிறை சென்றவர் | ருக்மணி லட்சுமிபதி |
| (முதல் பெண்) தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர் | அஞ்சலி தேவி |
| (முதல் பெண்) எவரஸ்ட் சிகரத்தை அடைந்தவர் | பச்சேந்திரிபால் |

**<u>பிழை நீக்கி எழுதுக</u>**

1. **மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.**

   மதீனாவுக்குச் சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.

2. **நல்ல தமிழக்கு எழுதுவோம்.**

   நல்ல தமிழில் எழுதுவோம்.

3. **பவளவிழதான் பரிசு உரியவள்.**

   பவளவிழிதான் பரிசுக்கு உரியவள்.

4. **துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.**

   துன்பத்தைப் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்.

5. **குழலியும் பாடத் தெரியும்.**

   குழலிக்கும் பாடத் தெரியும்.

**<u>இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க</u>**

1. அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

   அலுவலர் வந்தவுடன் அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

2. சுடர்க்கொடி பாடினாள், மாலன் பாடினான்.

சுடர்க்கொடி பாடினாள்; மாலனும் பாடினான்.

3. பழனிமலை பெரியது, இமயமலை மிகப் பெரியது.

பழனிமலை பெரியது; ஆனால் இமயமலை மிகப் பெரியது.

4. கவலையற்ற எதிர்காலம், கல்வியே நிகழ்காலம்.

கவலையற்ற எதிர் காலத்திற்குக் கல்வியே நிகழ்காலம்.

**சொற்களைப் பயன்படுத்திக் தொடர்களை உருவாக்குக**

| | | | |
|---|---|---|---|
| மாணவர்கள் | ஆசிரியர் | பாடவேளை | கரும்பலகை |
| புத்தகம் | எழுதுகோல் | அழிப்பான் | வழிபாட்டுக் கூட்டம் |
| அறை | கல்லூரி | உயர்நிலை | சீருடை |

(எ.கா) : வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர் சீருடையுடன் நின்றனர்.

1. உயர்நிலை மாணவர்கள் புத்தகம், எழுதுகோல், அழிப்பான் கொண்டுவந்தனர்.

2. கல்லூரி மாணவர்கள் மடிக்கணினியை அறையில் பயன்படுத்த வேண்டும்.

3. மடிக்கணினிப் பாட வேளையில் ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக் காட்டி விளக்குவார்.

**பொருள் கூறுக**

அரங்கு - நாடகம் ஆடும் இடம்

ஒட்பம் - அறிவு

கான் - காடு

நசை - அன்பு

பொருநர் - கூத்தர்

## தொழில் பல முனைதல்

## உரைநடை உலகம்

## வணிகவாயில்

**1. சரியானை விடையைத் தேர்வு செய்க**

1. காந்தவூசியைப் பற்றிய செய்தியைக் கூறும் நூல் ..............................

அ) சிலப்பதிகாரம் ஆ) சீவகசிந்தாமணி

இ) பெங்கதை **ஈ) மணிமேகலை**

2. அரேபியர் வணிகம் செய்த இடத்திற்கு எப்பெயர் இடப்பட்டிருந்தது?

அ) ஆவணம் ஆ) சாலை

**இ) பந்தர்** இ) மறுகு

3. இராமநாதபுரம் அழகன் குளத்தில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓட்டுக் கீறல் கோட்டு ஓவியம் ......................க் குறிக்கிறது.

அ) கடல் கோளை ஆ) குதிரையை

**இ) வணிகக்கப்பலை** ஈ) வாழ்க்கை முறையை

4. கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை காலத்தில் ஆட்சி புரிந்த சோழ இளவரசன் ............................

அ) கரிகாலன் **ஆ) கிள்ளிவளவன்**

இ) நலங்கிள்ளி ஈ) நெடுங்கிள்ளி

**சிறுவினாக்கள்**

**1. தமிழ் நாட்டில் புகழ் பெற்று விளங்கிய துறைமுகங்கள் யாவை?**

பண்டைக் காலத்தில் வடவேங்கடம் முதல் தென்குமரி வரையிலான பகுதி தமிழர் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. கொல்லந்துறை, எயிற்பட்டினம், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை ஆகியன கிழக்குக்கரைப் பகுதியிலிருந்த புகழ்பெற்ற துறைமுகங்களாகும். மங்களூர், நறவு, தொண்டி, மாந்தை, முசிறி, வைக்கரை, விழிஞம் ஆகியன மேற்குக் கடற்கரைப் பகுதியில் புகழ்பெற்று விளங்கிய துறைமுகங்களாகும்.

**2. முசிறித் துறைமுகத்தின் அமைப்புக் குறித்து எழுதுக**

தமிழ்நாட்டின் மேற்குத் கடற்கரைப் பகுதியில் சேரர்களின் ஆட்சி எல்லைக்குள் அமைந்த புகழ்பெற்ற துறைமுகம் முசிறி. இது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உருவான பேரியாறு கடலில் கலக்குமிடத்தில் இயற்கையாய் உருவான துறைமுகமாகும். அக்காலத்தில் சேரநாட்டுத் தலைநகரான வஞ்சி, பேரியாற்றின் கரையிலுள்ள முசிறித் துறைமுகப் பட்டினத்திற்கு அருகிலேயே அமைந்திருந்தது.

**3. முசிறித் துறைமுகத்தில் நடைபெற்ற மிளகு ஏற்றுமதி குறித்து எழுதுக**

முசிறித் துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி சிறப்புடன் நடைபெற்றது. யவனர் விரும்பி வாங்கியதால் மிளகிற்கு 'யவனப்பிரியா' என்ற பெயர் ஏற்பட்டது. யவனக் கப்பல்கள் பொன்னைத் தந்து மிளகை வாங்குவதற்காக முசிறிக்கு வந்தன. இதனை,

*சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க*
*யவனர் தந்த வினைமாண் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளங்கெழு முசிறி* என்கிறது அகநானூறு.

அரேபியர் சேரநாட்டு மிளகைக் கொண்டு போய்ச் செங்கடல் துறை முகங்களிலும் எகிப்தின் நைல்நதி கடலில் கடக்கும் இடத்திலுள்ள அலெக்சாண்டிரியா துறைமுகப்பட்டினத்திலும் விற்றனர்.

**4. காவிரிப்பூம்பட்டினத்தின் அமைப்புப் பற்றி எழுதுக**

சோழவள நாட்டில் காவிரியாறு கடலில் கலக்கின்ற இடத்தில் வடகரையின்மேல் காவிரிப்பூம்பட்டினம் என்னும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தது. காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு கூறுகளாய்ப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் நாளங்காடி இருந்தது. கடற்கரை ஓரமாய்க் காவிரியாற்றின் கரைமேல் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது.

**5. புகார் நகரத்துத் தெருக்களில் நடைபெற்ற வணிகம் குறித்து எழுதுக**

புகார் நகரத்தின் அகன்ற பெரிய தெருக்களில் கங்கைக்கரையிலிருந்து வந்த பொருள்களும் காவிரிக்கரை வழங்கிய வளங்களும் ஈழந்து உணவுப் பொருள்களும் கடாரம் தந்த பொருள்களும் இன்னும் பல நாடுகளில் இருந்து வந்த பொருள்களும் கலந்து நிறைந்தன.

**6. காவிரிப்பூம் பட்டினத்தில் சோழ இளவரசர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டுத் தருக**

காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ இளவரசர்கள் வாழ்ந்திருந்தனர். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காப்பியங்களின் தலைமை மாந்தர்களான கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோர் இளவரசன் கிள்ளிவளவன் ஆட்சிக் காலத்தில் இப்பட்டினத்தில் வாழ்ந்திருந்தனர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**7. இராமநாதபுரம் அழகன் குளத்து அகழாய்வு பற்றி எழுதுக**

இராமநாதபுரம் அழகன் குளத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கீறல் கோட்டோவியம் வணிகக் கப்பலைக் குறிக்கிறது சங்ககாலத் தமிழர்களின் துறைமுகமாகக் கருதப்படும் அழகன் குளத்திலிருந்து ரோம் நகரத்திற்குக் கடல் பயணம் மேற்கொண்ட கப்பலின் மாதிரியாக இது குறிப்பிடப்படுகிறது.

**8. ஹிப்பல்ஸ் பருவக்காற்று குறிப்பு எழுதுக**

பொ. ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பல்ஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி பருவக்காள்ளின் உதவியினால் முசிறித் துறைதுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுப்பிடித்தார். அது முதல், யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநைட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன. அந்தப் பருவக்காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பல்ஸ் என்பதையே சூட்டினர்.

**9. தமிழரின் கடல்வழி வணிகப் பழைமையை விளக்குக**

வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் எனக் கடல்களுக்குப் பெயர் சூட்டப்படுவதற்கு முன்பே தமிழர்கள் அந்தக் கடல்களைக் கடந்து கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் வணிகம் செய்யப் பயணம் மேற்கொண்டனர். தமிழர்கள் கடல் கடந்து சென்றதைப் போலவே கிரேக்கர்களும் உரோமானியர்களும் சாவகத்தீவனரும் வணிகத்திற்காகத் தமிழகத்திற்கு வந்து சென்றனர்.

பண்டைக் காலத்தில் வடவேங்கடம் முதல் தென்குமரி வரையிலான பகுதி தமிழர் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. கொல்லாந்துறை, எயிற்பட்டினம், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை ஆகியன கிழக்குக்கரைப் பகுதியிலிருந்த புகழ்பெற்ற துறைமுகங்களாகும். மங்களூர், நறவு, தொண்டி, மாந்தை, முசிறி, வைக்கரை, விழிஞம் ஆகியன மேற்குக் கடற்கரைப் பகுதியில் புகழ்பெற்று விளங்கிய துறைமுகங்களாகும்.

**10. முசிறித் துறைமுகத்தில் நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதி பற்றி விளக்குக.**

முசிறித் துறைமுகத்திலிருந்து நறுமணப் பொருள், விலை உயர்ந்த கற்கள், முத்து, வைரம், நீலமணி, தந்தம், சீனப்பட்டு, ஆமை, ஓடுகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. பவளம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலிய பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. கடல் வழி வணிகம் ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டது. எடுத்துக்காட்டாக, முசிறி – அலெச்சாண்டிரியா ஒப்பந்தம் என்பது முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகர் ஒருவருக்கும் எகிப்தின் நைல் நதிக்கரையிலுள்ள அலெக்சாண்டிரியா நகரில் வாழ்ந்த கிரேக்க வணிகர் ஒருவருக்கும் பொ.ஆ.150 அளவில் ஏற்படுத்தப்பட்டதாகும். அவ்வணிக ஒப்பந்தப்படி, தமிழ் வணிகர் ஒருவர், கப்பலில் ஒருமுறை கொண்டுசென்ற வணிகப் பொருள்களின் பண மதிப்பீடு, 2,94,84,000 கிராம் வெள்ளியின் எடைக்கு ஈடானது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று எகிப்து நாடு உரோமப் பேரரசின்கீழ் இருந்தது.

**11. காவிரிப் பூம்பட்டினத் துறைமுக அமைப்பும் சிறப்பும் யாவை?**

சோழவள நாட்டில் காவிரியாறு கலக்கின்ற இடத்தில் வடகரையின்மேல் காவிரிப்பூம்பட்டினம் என்னும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தது. காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் நாளங்காடி இருந்தது. கடற்கரை ஓரமாகக் காவிரியாற்றின் கரைமேல் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது. காவிரியாற்றின் கழிமுகம் ஆழமாகவும் அகலமாகவும் பல கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றதாகவும் இருந்தது. கப்பல்கள்

பாய்களைச் சுருட்டாமலும் பாரத்தைக் குறைக்காமலும் நேரே ஆற்றினுள் புகுந்து துறைமுகத்தை அடைந்தன.

**12. பூம்புகார்த் துறைமுகத்தின் செயல்திறன் குறித்துப் பட்டினாப்பாலை தெரிவிக்கும் செய்தி யாது?**

இக்காலத்தில் ஒரு துறைமுகத்தின் செயல்திறனைக் கணக்கிடுவதற்குக் கப்பல்கள் ஏற்றுமதி இறக்குமதிக்கென வந்து செல்லும் நேரத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். இதற்கென இன்று நமது துறைமுகங்களில் ஒருவழிப்பாதை முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதுபோல் அக்காலத்திலேயே துறைமுகங்களுக்கு அருகில் ஏற்றுமதிக்குத் தனிப்பகுதியும் இறக்குமதிக்குத் தனிப்பகுதியும் இருந்தன. பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க நல்ல அகன்ற கிடங்குகள் அமைக்கப்பட்டன. என்றும் பொருள்களுக்குச் சுங்கத் தீர்வைகள் அங்கேயே வசூலிக்கப்பட்டன என்றும் பட்டினப்பாலை தெரிவிக்கிறது.

**13. கொற்கைத் துறைமுகத்தின் அமைப்பும் பெருமையும் யாவை?**

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கை. பாண்டியர்களில், ஆளும் மன்னரை அடுத்து அரசாள வரும் பட்டத்து இளவரசர்கள் இத்துறைமுக நகரிலேயே தங்கி நிருவாகம் கற்றனர். பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்துறந்தபின் கொற்கையில் இருந்த பட்டத்து இளவரசன் வெற்றிவேற் செழியன் மதுரை வந்து அரியணை ஏறினான் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக் காதையிலுள்ள

கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன்
மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்

ஆகிய அடிகள் குறிப்பிடுகின்றன. பாண்டியர்களின் கப்பற்படைத் தளமாகவும் கொற்கை விளங்கியது.

**14. கொற்கைத் துறைமுகத்தில் நடைபெற்ற முத்து வணிகம் குறித்து எழுதுக**

கொள்கைடக குடாக்கடல் அக்காலத்தில் நிலத்தின் உள்ளே ஐந்து கல் தொலைவிற்கு ஊடுருவியிருந்தது. இங்கு முத்துச்சிப்பிகளும், சங்குகளும் உண்டாயின. செல்வர் ஏறிவரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக்கொள்ளும் அளவிற்குக் கரையோரங்களில் பொருள்கள் குவிந்திருந்தன. இதனை அகநானூறு

*திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்*
*கவர்நடைப்புரவிக் கால்வடுத் தபுக்கும்*
*நற்றேர் வழுதி கொற்கை முன்துறை*

என்று குறிப்பிடுகிறது. முத்துக் குளிப்பது மட்டுமன்றி வலம்புரிச்சங்கு எடுக்கவும் அங்குள்ள ஆடவர் கடலில் மூழ்குவர் என்னும் செய்தியை, ‘வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்’ என அகநானூற்றின் 350 ஆம் பாடல் சுட்டுகிறது.

## கவிதைப் பேழை

### நான்மாடக் கூடல்

1. மதுரையில் ............... மணம் சூழ்ந்திருக்கும்.

அ) தாழம்பூ ஆ) பிச்சிப்பூ

**இ) மல்லிகைப்பூ** ஈ) முல்லைப்பூ

2. பாரதி பணியாற்றிய பாடசாலை ..................

**அ) சேதுபதி உயர்நிலைப்பள்ளி** ஆ) நகராட்சி உயர்நிலைப்பள்ளி

இ) மதுரைக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி ஈ) தூய மரியன்னை உயர்நிலைப்பள்ளி

3. மதுரைக்கு உள்ள சிறப்புப் பெயர் .................................

அ) கல்விப் பெருநகரம் ஆ) செல்வம் சேர் நகரம்

**இ) தூங்கா நகரம்** ஈ) எழில் மாநகர்

4. ..................... மலைகள் கொண்ட பெருநகரம் எனச் சிந்துப்பாடல் மதுரையைக் குறிப்பிடுகிறது.

அ) 2 ஆ) 3

**இ) 4** ஈ) 5

**சிறுவினாக்கள்**

**1. மதுரைக்கும் தமிழுக்கும் சேர்ந்து அமைந்த பெருமைகளைச் சிந்துப் பாடல் எங்ஙனம் கூறுகிறது.**

மதுரையில் பாயும் வையை நதியைப் புலவர்கள் பாடியுள்ளனர். திருவிளையாடற்புறாணம் என்னும் காவியம் மதுரையின் பெருமையைக் கூறுகின்றது. பாரதியார் தமிழாசிரியராய்ப் பணியாற்றிய சேதுபதி உயர்நிலைப் பள்ளி மதுரையில் உள்ளது. மதுரைக்கும் தமிழுக்கும் சேர்ந்து அமைந்த பெருமைகள் இவையே ஆகும்.

**2. மதுரையைச் சூழ்ந்து விளங்கும் மலைகள் யாவை?**

மதுரையைச் சூழ்ந்து விளங்கும் மலைகள் யானைமலை, நாகமலை, பசுமலை, சமணமலை என்பன.

இலக்கணக்குறிப்பு

பாடிய, எழுந்த, போதித்த, நின்ற - இறந்த காலப் பெயரெச்சங்கள்

செங்கோல், பேரழகு, நாலுமலை, பெருநகரம், பல்லாயிரம் - பண்புத் தொகைகள்

சூழ்ந்திருக்கும், வாழ்ந்திருக்கும், ஏறும், முழிச்சிருக்கும், செழிச்சிருக்கும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள்

நூங்கா (நகரம்) - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பாடாத - எதிர்மறைப் பெயரெச்சம்

பாடு - ஏவல் வினைமுற்று

**உறுப்பிலக்கணம்**

பாடிய : பாடு + இ(ன்) + ய் + அ

பாடு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை;

'ன்' கெட்டது; ய் - உடம்படுமெய்; அ – பெயரெச்ச விகுதி

சூழ்ந்திருக்கும் : சூழ்ந்திரு + க் + கு + உம்

சூழ்ந்திரு – பகுதி; க் – சந்தி; கு - சாரியை;

உம் – செய்யும் வாய்பாட்டு விகுதி; விகுதி எதிர்காலம் காட்டியது.

குறிப்பு: காலம் காட்டும் விகுதி அமைந்த சொற்களில் 'க்' எதிர்கால இடைநிலையாய் அமையாது. விகுதி காலம் காட்டாத சொற்களில் க் எதிர்கால இடைநிலை ஆகலாம். (எ.கா: செய்கேன் – செய் + க் + ஏன்)

எழுந்திரு : எழு + த்(ந்) + த் + அ

எழு - பகுதி; த் - சந்தி; ந் - விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;

அ – பெயரெச்ச விகுதி

ஏறும் : ஏறு + உம்

ஏறு - பகுதி; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு விகுதி;

விகுதி எதிர்காலம் காட்டியது.

## கவிதைப் பேழை

## மதுரைக்காஞ்சி

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. மதுரைக்காஞ்சி ...................... நூல்களுள் ஒன்று

அ) எட்டுத்தொகை ஆ) காப்பியவகை

**இ) பத்துப்பாட்டு** ஈ) பதினெண் கீழ்க்கணக்கு

2. மதுரைக் காஞ்சியை இயற்றியவர் ..............................

அ) மதுரைக் குமரனார் ஆ) மருதனிள நாகனார்

இ) மாங்குடி கிழார் **ஈ) மாங்குடி மருதனர்**

3. புரிசை என்பதன் பொருள் ......................

அ) ஆயுதம் ஆ) குதிரை

இ) கூரை **ஈ) மதில்**

4. 'ஆறு' என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) பெயரெச்சம் ஆ) முதல்நிலைத் தொழிற்பெயர்

**இ) முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்** ஈ) வினையெச்சம்

**சிறுவினாக்கள்**

**1. மதுரைக் காஞ்சியைப் பற்றி நூற்குறிப்பு வரைக**

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி. காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள். மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக் காஞ்சி எனப்பட்டது. இந்நூல் 782 அடிகளைக் கொண்டது அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதைப் 'பெருகுவள மதுரைக்காஞ்சி' என்பர். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். மதுரைக் காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார்.

**2. மதுரையில் இருந்த இல்லங்களின் அமைப்பை எழுதுக**

மதுரையில் மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு பிரிவுகளைக் கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் இருந்தன.

**3. மதுரை மாநகரின் அமைப்பை மதுரைக் காஞ்சி எவ்வாறு கூறுகிறது?**

மதுரை மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது. பழமையானதும் வரிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில், நெய்பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது. மேகங்கள் உலாவும் மலைபோல் மாளிகைகள் உயர்ந்து உள்ளன என மதுரை மாநகரின் அமைப்பை மதுரைக் காஞ்சி கூறிகிறது.

**4. மதுரைத் தெருக்களின் சிறப்பை மதுரைக் காஞ்சி எங்ஙனம் கூறியுள்ளது?**

ஆறு போன்ற அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலிபோல் ஒலிக்கிறது. இசைக் கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மைபோல எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியம் அல்லங்காடியும் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன என மதுரைத் தெருக்களின் சிறப்பை மதுரைக் காஞ்சி கூறுகிறது.

**இலக்கணக் குறிப்பு**

பல்படை, தொல்வலி, நெடுநிலை, திண்போர், பல்புழை, நல்இல், நெடுந்தெரு, பல்வேறு, மூந்நீர், நன்பணை, பெருநியமம் – பண்புத்தொகைகள்

| | | |
|---|---|---|
| ஆழ்ந்த, ஓங்கிய, கரிந்த, நிவந்த, எடுத்த | - | இறந்த காலப் பெயரெச்சங்கள் |
| நிலைஇய | - | சொல்லிசை அளபெடை |
| எழுந்து, மூழ்கி | - | இறந்தகால வினையெச்சங்கள் |
| குழாஅம் | - | செய்யுளிசை அளபெடை |
| வாயில் | - | இலக்கணப்போலி |
| மாகால் | - | உரிச்சொல் தொடர் |
| முழங்கிசை, இமிழிசை | - | வினைத்தொகைகள் |
| மகிழ்ந்தோர் | - | வினையாலணையும் பெயர் |

**பகுபத உறுப்பிலக்கணம்**

**ஆழ்ந்த** : ஆழ் + த் (ந்) + த் + அ

ஆழ் – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்) ;

த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

**ஓங்கிய** : ஓங்கு + இ (ன்) + ய் + அ

ஓங்கு – பகுதி; இ(ன்) – இறந்தகால இடைநிலை; ன் - கெட்டது;

ய் – உடம்படுமெய்; அ – பெயரெச்ச விகுதி

**கரிந்த** : கரி + த் (ந்) + த் + அ

கரி – பகுதி; த் - சந்தி; ந் - விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;

அ - பெயரெச்ச விகுதி

**எழுந்து** : மூழ்கு + கு

மூழ்கு – பகுதி; இ – வினையெச்ச விகுதி இறந்த காலம் காட்டியது.

**எடுத்த** : எடு + த் + த் + அ

எடு – பகுதி; த் – சந்தி; த் – இறந்த கால இடைநிலை;

அ – பெயரெச்ச விகுதி

**தொட்டு** : தொடு (தொட்டு) + உ

தொடு - பகுதி; தொட்டு – பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டியது;

உ – வினையெச்ச விகுதி;

ஆடும் : ஆடு + உம்

ஆடு – பகுதி; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு விகுதி

## சந்தை

**1. பல்லங்காடியகம் சந்தை பற்றி எழுதுக**

ஒரே இடத்தில் எல்லாப் பொருள்களும் விற்பனைக்கு இருக்கும். அதுவே பல்பொருள் அங்காடி. குண்டூசியிலிருந்து கணினி வரைக்கும் அங்கே வாங்கலாம். ஒரே இடத்தில் பல கடைகள் இருக்குமானால் அது பல்லங்காடியகம் எனப்படுகிறது. ‘மால்’ என்னும் சொல்லால் இது வழங்கப்படுகிறது.

கடைகளேயன்றித் திரைப்பட அரங்குகளும் உணவகங்களும் கேளிக்கை அரங்குகளும் மாலில் உண்டு. இங்குள்ள கடைகளில், தேவைக்கும் அளவுக்கும் ஏற்பப்பொருள்களை நாமே தேர்ந்தெடுக்கலாம். பெரும்பாலும் பல அளவுள்ள பொட்டலங்களில் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். பொட்டலங்களில் பொருள்களின் பயன்பாட்டுத் தன்மைக்குரிய கெடுநாளும் குறித்திருப்பது இன்றியமையாதது.

இவ்விடங்களில் நிரந்தரப் பணியாளர் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும் இக்கடைகளைத் திட்டமிட்டால்தான் நிருவகிக்க முடியும். அதற்கேற்ப மேலாண்மை, கண்காணிப்பு, கட்டமைப்பு வசதி, தொடர் பராமரிப்பு எனப் பல தொடர் செயல்பாடுகள் உண்டு. பெரிய அளவில் முதலீடு செய்தால்தான் கடை வைக்க முடியும்.

**2. சந்தை வணிகம் குறித்து எழுதுக**

கிராமத்து மக்கள் தங்கள் நிலத்தில் விளையும் காய்கறி, கீரை, தானியம் போன்ற பொருள்களை விற்கவும் தேவையான மாற்றுப் பொருள்களை வாங்கவும் விரும்பி முச்சந்தி நாற்சந்திகளில் கடை விரித்தார்கள். இதுதான் சந்தை என்னும் பொது வணிக இடமாகப் பின்னால் மாறியது.

கிராமச் சந்தையில் கிடைக்காத பொருள்ளே இல்லை. கடுகு, சீரகம் தொடங்கி உணவுத் தானியங்கள், காய்கறிகள், கோழி, ஆடு, மாடு, குதிரை முதலியவை சோப்பு, சீப்பு, கண்ணாடி வளையல்கள் போன்ற அலங்காரப் பொருள்கள், இரும்புப் பொருள்கள், பாத்திரங்கள், துணிகள் ஆகிய எல்லாவற்றையும் அங்கே வாங்கலாம். கால்நடைகளை விற்பதற்கெனத் தனிச்சந்தைகளும் கூடுகின்றன.

ஒவ்வோர் ஊரும் ஒவ்வொரு சந்தைக்கு பெயர் பெற்றது. மணப்பாறை – மாட்டுச்சந்தை, அய்யலூர் – ஆட்டுச் சந்தை, ஒட்டன் சத்திரம் – காய்கறிச் சந்தை, நாகப்பட்டினம் – மீன்சந்தை என்பன குறிக்கத்தக்கவை.

சந்தைக்குப் போவது என்பது திருவிழாவுக்குப் போவது மாதிரி. அக்கம் பக்கத்து ஊர் உறவுகளைச் சந்தித்துப் பேசலாம். சாதி மதங்களைத் தாண்டி எல்லோருடனும் பழக முடியும்.

## ஆகுபெயர்

**1. ஆகுபெயர் என்பது யாது?**

ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும்.

எ.கா: ‘பெண்களைக் கேலி செய்த இளைஞரை ஊரே இகழ்ந்தது’

விளக்கம் : ஊர் திட்டுவது இல்லை. மாறாக, ஆவ்வூரில் உள்ள மக்கள் இகழ்ந்தனர் என்பது இதன் பொருள். ஊர் என்னும் பெயர். ஊரில் உள்ள மக்களுக்கு ஆகிவந்தது. இதனை இடவாகு பெயர் என்பர்.

**2. ஆகுபெயர்களுள் சிலவற்றை விளக்குக**

**1. பொருளாகு பெயர் (முதலாகு பெயர்)**

எ.கா: முல்லையைத் தொடுத்தாள்

விளக்கம்: முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை (உறுப்பு) ஆகிய பூவுக்கு ஆகி வந்தது.

**2. இடவாகு பெயர்**

எ.கா : வகுப்பறை சிரித்தது

விளக்கம்: வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது.

**3. காலவாகு பெயர்**

எ.கா: கார் அறுத்தான்

விளக்கம் : கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது.

**4. சினையாகு பெயர்**

எ.கா : மருக்கொழுந்து நட்டான்

விளக்கம்: மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு ) பெயர், அதன் செடிக்கு ஆகி வந்தது.

**5. பண்பாகு பெயர்**

எ.கா: மஞ்சள் பூசினாள்

விளக்கம் : மஞ்சள் என்னும் பண்பு, அவ்வணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது.

**6. தொழிலாகு பெயர்**

எ. கா: வற்றல் தின்றான்

விளக்கம் : வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப் பொருளுக்கு ஆகி வந்தது.

**7. கருவியாகு பெயர்**

எ.கா: வானொலி கேட்டு மகிழ்ந்தனர்

விளக்கம் : வானொலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது.

**8. காரியவாகு பெயர்**

எ.கா: பைங்கூழ் வளர்ந்தது

விளக்கம் : கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகிய வந்தது.

**9. கருத்தாவாகு பெயர்**

எ.கா : அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்.

விளக்கம் : அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது.

**10. எண்ணலளவை ஆகுபெயர்**

எ.கா : ஒன்று பெற்றால் ஒளிமயம்!

விளக்கம் : ஒன்று என்னும் பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது.

**11. எடுத்தலளவை ஆகுபெயர்**

எ.கா : இரண்டு கிலோ கொடு

விளக்கம் : நிறுத்து அளக்கும் எடுத்தல் என்னும் அளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

**12. முகத்தலளவை ஆகுபெயர்**

எ.கா : அரை லிட்டர் வாங்கு

விளக்கம் : முகந்து அளக்கும் முகத்தல் அளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

**13. நீட்டலளவை ஆகுபெயர்**

எ.கா: ஐந்து மீட்டர் வெட்டினான்

விளக்கம் : நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

**1. ஆகுபெயரைக் கண்டறிக**

அ. தமிழரசி வள்ளுவரை ஒவியமாக வரைந்தாள்

**தமிழரசி வள்ளுவரைப் படித்தாள்**

**ஆ) மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது.**

நாடும் வீடும் நமது இரு கண்கள்

இ) கலைச்செல்வி பச்சைநிற ஆடையை உடுத்தினாள்.

**கலைச்செல்வி பச்சை உடுத்தினாள்**

**ஈ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி**

நாலடி நானூறும் இரண்டடித் திருக்குறளும் வாழ்வுக்கு உறுதி தரும்.

உ) ஞாயிற்றை உலகம் சுற்றி வருகிறது.

**நீங்கள் கூறுவதை உலகம் ஏற்குமா?**

**2. ஆகுபெயர் அமையுமாறு தொடர்களை மாற்றி எழுதுக**

**அ) மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்.**

மதுரை, இரவிலும் வணிகம் செய்கிறது.

**ஆ) இந்திய வீரர்கள் எளிதில் வென்றனர்.**

இந்தியா எளிதில் வென்றது.

**இ) நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கத்தில் உள்ளவர்கள் சிரித்தனர்.**

நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கம் சிரித்தது.

**ஈ) நீரின்றி இவ்வுலக மக்களால் இயங்க முடியாது.**

நீரின்றி இவ்வுலம் இயங்க முடியாது.

1. இக்காலப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக

1. பேச்சுவழக்கில் : 'இத்தாப்பா 321, இங்கே வா'. 321 என்பது எண்ணைக் குறிக்கவில்லை. அதற்குரிய ஆளைக் குறிக்கிறது. இது ஆகுபெயர்.

2. எழுத்து வழக்கு : தேர்தலில் 'ஆலமரம்' வீழ்ந்தது. இங்கு 'ஆலமரம்' என்பது மரத்தைக் குறிக்காமல் அதை அடையாளமாய்க் கொண்ட கட்சியைக் குறிப்பதால் ஆகுபெயர் எனலாம்.

**2. பட்டப்பெயர்கள் ஆகுபெயர்கள் ஆகுமா? எழுத்துக்காட்டுகளுடன் விளக்குக**

குறிப்பிட்ட ஒரு காரணத்துக்காகக் குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒருவருக்கு வழங்கப்படும் பெயர்களைப் பட்ட பெயர் என்கிறோம். இது ஆகுபெயர் ஆகாது.

எ.கா: ஒருவர் தம் சிறுவயதில் ஒருமுறை ஒரு வீட்டில் மொச்சைப் பயிறு திருடினார். அப்போது அகப்பட்டுக் கொண்டார். அதுமுதல் அவரை 'மொச்சை' என்று அவ்வூரார் கூப்பிட்டனர். அப்பெயரே எத்தனை ஆண்டுகள் ஆகியும் நிலைபெற்று விட்டது. 'மொச்சை வருகிறான்' – இப்படிச் சொன்னால் 'மொச்சை' என்பது அவனையே குறிக்கும். ஆனாலும் இது ஆகுபெயர் ஆகாது. ஏன்?

1. ஆகுபெயர் தொன்தொட்டு வருவது

2. ஆகுபெயர் தமிழ் பேசும் அனைவராலும் அறியக்கூடியதாய் இருக்க வேண்டும். இது ஒரு சிலர்க்கு மட்டுமே தெரிந்த குறுமொழி.

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. அஃகசாலை என்பது ...........................த்தைக் குறிக்கும்.

அ) அங்காடிகள் அமைந்துள்ள இடம் ஆ) யவனர்கள் குருக்கின்ற இடம்

**இ) நாணயங்கள் அச்சடிக்கும் இடம்** ஈ) அரேபியர்களின் பந்தர் இடம்

2. கூற்று 1 – காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் துறைமுகமாகும்.

கூற்று 2 – வண்டியூர் என்னும் ஊர் காஞ்சி மாநகரத்தில் அமைந்துள்ளது.

அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1, 2 தவறு

இ) கூற்று 2 சரி, 1 தவறு **ஈ) கூற்று 1 சரி, 2 தவறு**

3. 'யவனப்பிரியா' என்பது எதனைக் குறிக்கும்?

**அ) மிளகு** ஆ) முத்து

இ) சங்கு ஈ) தந்தம்

4. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் சங்க நூல்கள்

அ) பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு ஆ) குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து

இ) மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு **ஈ) மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை**

5. விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க

காவிரியாற்றின் கழிமுகம் ஆழமாகவும், அகலமாகவும் இருந்தது.

பகலில் இயங்கும் கடைகள் நாளங்கடிகள்.

ஆ) காவிரியாற்றின் கழிமுகம் எதற்காக அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எவ்விதம் அழைக்கப்பட்டன?

**ஆ) காவிரியாற்றின் கழிமுகம் எவ்வாறு அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?**

இ) காவிரியாற்றின் கழிமுகம் எங்கு அமைந்துள்ளது – பகலில் கடைகள் எவ்வாறு இயங்கின.

ஈ) காவிரியாற்றின் கழிமுகம் எதனால் அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எப்படி அழைக்கப்பட்டன.

## சிறுவினாக்கள்

**1. மதுரைக்காஞ்சி – பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுக**

காஞ்சி என்பதற்று நிலையாமை என்பது பொருள். இந்நூல் மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி என்னும் பெயர் பெற்றது.

**2. எதன் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது?**

வணிகத்தின் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது. (சில சூழ்நிலைகளில் போருக்காகவும் கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது).

**3. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக**

எங்கள் ஊரில் நெசவுத் தொழில் நடைபெறுவதால் சேலை, வேட்டி முதலிய உற்பத்தி செய்யப்படுகின்றன. சந்தையில் பவானி ஜமக்காளம், சின்னாளப்பட்டிச் சேலை முதலியன விற்கப்படுகின்றன.

**4. பண்டைத் தமிழர்கன் துறைமுகப் பண்பாடு யாது?**

பண்டைத் தமிழர்களின் போர், வணிகம் போன்ற காரணங்களுக்காகத் துறைமுகங்களைப் பயன்படுத்தினர்.

**5. நாலுமலை கொண்ட பெருநகரம் – இவ்வடிகள் குறிக்கப்படும் மலைகள் யாவை?**

நாலுமலை கொண்ட பெருநகரம் என்னும் அடியில் குறிக்கப்படும் மலைகள் யானைமலை, நாகமலை, பசுமலை, சமணமலை என்பன.

**6. 'மாகால் எடுத்த முந்நீர்போல' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக**

இடம் : இத்தொடர், மதுரைக் காஞ்சியில் இடம் பெற்றுள்ளது.

விளக்கம் : மதுரை நகரில் பல்வேறு ஒலிகள் எழுகின்றன. விழாவைப் பற்றி முரசறைவோர் முரசறைகின்றனர். அந்த முழக்கம் பெருங்காற்றுப் புகுந்த கடல் ஒலிபோல் இருக்கிறது என்பது இத்தொடரின் கருத்து (மாகால் – பெருங்காற்று, முந்நீர் – கடல்)

**7. கொற்கை – சிறுகுறிப்புத் தருக**

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றில் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கை. பாண்டியர்களில், ஆளும் மன்னரை அடுத்து அரசாள வரும் பட்டத்து இளவரசர்கள் இத்துறைமுக நகரிலேயே தங்கி நிருவாகம் கற்றனர். பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்துறந்தபின் கொற்கையில் இருந்த பட்டத்து இளவரசன் வெற்றிவேற் செழியன் மதுரை வந்து அரியணை ஏறினான் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக் காதையிலுள்ள.

*கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன்*
*மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்*

ஆகிய அடிகள் குறிப்பிடுகின்ற. பாண்டியர்களின் கப்பற்படைத் தளமாகவும் கொற்கை விளங்கியது.

**3. காவிரிப் பூம்பட்டினம் குறித்து இலக்கியங்களில் இடம் பெற்ற கருத்துகள் யாவை?**

சோழவள நாட்டில் காவிரியாறு கடலில் கலக்கின்ற இடத்தில் வடகரையின்மேல் காவிரிப்பூம்பட்டினம் என்னும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தது. காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்க, பட்டினப்பாக்கம் என இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் நாளங்காடி இருந்தது. கடற்கரை ஓரமாகக் காவிரியாற்றின் கரைமேல் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது.

காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ இளவரசர்கள் வாழ்ந்திருந்தனர். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காப்பியங்களின் தலைமை மாந்தர்களான கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோர் இளவரசன் கிள்ளிவளவன் ஆட்சிக் காலத்தில் இப்பட்டினத்தில் வாழ்ந்திருந்தனர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**4. ஏறு தழுவுதல் காளைகளால் – தோள்**
**ஏறுமே கம்பீரம் மாலைகளால் – இவ்வடிகள்**
**சுட்டும் வீர விளையாட்டுப் பற்றி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக**

ஏறு என்பது காளையைக் குறிக்கும். ஏறு தழுவுதல் தமிழரின் வீர விளையாட்டு. குறிப்பிட்ட நாளில் குறித்த திடலில் இது நடைபெறும். ஒவ்வொரு காளையாகத் குறிப்பிட்ட நாளில் குறித்த திடலில் இது நடைபெறும். ஒவ்வொரு காளையாகத் திடலுக்குள் ஓடி வரும். மாடு வரும் வழி வாடிவாசல் எனப்படும். சீறி வரும் காளையை இளைஞர் அடக்குபவர்க்குப் பரிசுகள் கிடைக்கும். விளையாட்டில் சிலர்க்குக் காயங்கள் ஏற்படும்; சிலர் இறப்பதும் உண்டு. பண்டைக் காலத்தில் காளையை அடக்கிய வீரரைத் திருமணம் செய்யவே முல்லை நிலத்து மகளில் விரும்பினர் எனக் கலித்தொகை என்னும் தமிழ் இலக்கியம் சொல்கிறது. மதுரை மாவட்டத்து அலங்காநல்லூரில் பொங்கள் திருநாளை அடுத்து ஏறுதழுவுதல் ஆகிய மஞ்சுவிரட்டு நடைபெறுகிறது. உலகப் புகழ் பெற்ற இதில் கலந்து கொள்ளவும், இதைக் காணவும் பெருங்கூட்டம் கூடுகிறது. காளையை அடக்குபவரின் தோள்களில் வேட்டி துண்டு, மாலைகள் அணிவிக்கப் பெறும். வீரர் கம்பிரமாய் உலாவருவர்.

**5. தொடரில் உள்ள பிழைகளைக் கண்டறிந்து நீக்குக**

1. மலையேறிய மக்கள் மாலையில் வேகவேகமாய்க் கீழிறங்கின.
   மலையேறிய மக்கள் மாலையில் வேக வேகமாய்க் கீழிறங்கினர்.
2. எங்கள் ஊர் சந்தையில் காய்க்கறிகள் கிடைக்கும்.
   எங்கள் ஊர்ச் சந்தையில் காய்கறிகள் கிடைக்கும்
3. பண்டைத் துறைமுகங்களில் ஏற்றுமதிச் செய்யப்பட்டது.
   பண்டைத் துறைமுகங்களில் ஏற்றுமதி செய்யப்பட்டது.
4. சிட்டுக்கு சிறகுகள் முளைத்தது.
   சிட்டுக்குச் சிறகுகள் முளைத்தன.

**6. கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆகுபெயர்களை அட்டவணைப்படுத்துக**

விமலா கூடத்தில் உள்ள தட்டிலிருந்த டிசம்பரைத் தலையில் சூடிக் கொண்டாள். மல்லிகையைப் படத்திற்குச் சூட்டினாள். அடுப்பிலிருந்து பாலை இறக்கினாள். பின்பு தோட்டத்திற்குச் சென்றாள். விமலாவைப் பார்த்தவுடன் தோட்டம் அமைதியானது! “தலைக்கு இருநூறு கொடுங்கம்மா” என்று தோட்டத்தில் வேலை செய்தவருள் ஒருவர் சொன்னார். வெள்ளை மனங்கொண்ட வேலையாள்களின் கூலியைக் குறைக்க விரும்பாமல் அதனை அவளும் ஏற்றுக்கொண்டாள். அவர்கள் சென்றதும்,

காலையில் சாப்பிடப் பொங்கல் வைத்தாள். வீட்டில் சமையல் செய்ய, எந்தெந்தப் பொருள்கள் குறைவாக உள்ளன என்பதைப் பற்றிச் சிந்தித்தாள். "சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும்" எனத் திட்டமிட்டாள். அலைபேசி அழைத்தது. அரை நிமிடம் அலைபேசியில் வந்த வயலின் கேட்டு மகிழ்ந்தாள். பிறகு எடுத்துப் பேசினாள். காடைக்குப் போய்விட்டு வந்த விறகு பாதியில் விட்டிருந்த சிவசங்கரியைப் படித்து முடிக்க வேண்டும் என்று நினைத்தாள்.

**விடை:**

1. டிசம்பர் – கால ஆகுபெயர்
2. மல்லிகை – முதலாகு பெயர்
3. பாலை – தானியாகு பெயர்
4. தோட்டம் – இடவாகு பெயர்
5. தலைக்கு – சினையாகு யெர்
6. இருநூறு – எண்ணல் அளவை ஆகுபெயர்
7. பொங்கல் – தொழிலாகுபெயர்
8. ஐந்து கிலோ – நிறுத்தல் அளவை ஆகுபெயர்
9. மூன்று லிட்டர் – முகத்தல் அளவை ஆகுபெயர்,
10. நான்கு மீட்டர் – நீட்டல் அளவை ஆகுபெயர்
11. அலைபேசி – கருவியாகு பெயர்
12. வயலின் – கருவியாகு பெயர்
13. சிவசங்கரி - கருத்தா ஆகுபெயர்

**அ) பண்டைய நகரங்களாகவும் விளங்கி, இன்று அகழாய்விற்குரிய இடங்களாகவும் திகழ்வன எவை?**

கீழடி, கொற்கை, பூம்புகார்

**ஆ) பண்டைத் துறைமுகம், இன்றைய துறைமுகம் – வரைபடம் உணர்த்தும் வேறுபாடுகளைச் சுட்டுக.**

பண்டைத் துறைமுகங்கள் பாய்மரக் கப்பல்கள் வந்து செல்லும் அளவில் இருந்தன. இன்றைய துறைமுகங்கள் பாய்மரக் கப்பல்களை விட பன்மடங்கு பெரிய கப்பல்கள் வந்து செல்லும் அளவுக்கு உள்ளன.

**ஈ) முத்துக் குறித்தலுக்குப் பெயர் பெற்ற துறைமுகங்கள் .............**

கொற்கை, தூத்துக்குடி

**உ. புகழ்பெற்ற பண்டைத் துறைமுகங்கள் இன்று இல்லாமைக்கான காரணங்களைச் சிந்தித்து எழுதுக**

**புகழ்பெற்ற பண்டைத் துறைமுகங்கள் இன்று இல்லாமைக்கான காரணங்கள்:**

1. துறைமுக நகரங்கள் முக்கியத் தன்மை இழந்து போனதால் துறைமுகங்களின் பயன்பாடும் இல்லாமற் போனது. 2. பண்டைத்துறை முகங்கள் அளவிற் சிறயவை. இன்றைய தேவைக்கு ஏற்பப் பயன்பட இயலாத நிலையில் உள்ளவை.

**<u>ஆகுபெயர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக</u>**

| | | |
|---|---|---|
| விளைச்சல் | : | **விளைச்சல்** வீட்டுக்கு வந்தது. (தொழிலாகு பெயர்) |
| பால் | : | **பாலை** இறக்கிவை (தானியாகு பெயர்) |
| முழம் | : | **ஒரு முழம்** தா (நீட்டல் அளவை ஆகுபெயர்) |
| மதுரை | : | **மதுரை** மகிழ்ந்தது (இடவாகு பெயர்) |
| வெள்ளை | : | வீட்டிற்கு **வெள்ளை** அடி (பண்பாகு பெயர்) |
| பள்ளி | : | **பள்ளி** வென்று முதற் பரிசைப் பெற்றது (இடவாகு பெயர்) |

**<u>சொற்றொடரில் ஒளிந்துள்ள தமிழ்நாட்டின் துறைமுகங்களைக் கண்டறிந்து எழுதுக.</u>**

1. கல்வியில் தடம் பதித்தவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். – கடலூர்

2. பூம்பொழில் புகும் கார்கால மேகம் – பூம்புகார்
3. தூக்கத்தில் துள்ளிக் குதிக்கும் கரடி – தூத்துக்குடி
4. எட்டும் தொண்ணூறும் எண்ணுப்பெயர்கள் – எண்ணூர்

**பொருள் கூறுக**

தரங்கம் – அலை; தொள்ளை – துளை;
நியமம் - தெரு; பாடிலம் - நாடு; மாறன் – பாண்டியன்

**வினைமுற்றை வினையாலணையும் பெயராக்கித் தொடர்களை இணைக்க**

1. நேற்று ஒருவன் வந்தான்; அவன் என் தம்பி
   நேற்று வந்தவன் என் தம்பி
2. அவர் மகிழுந்தை நிறுத்தினார்; வீட்டிற்குள் நுழைந்தார்.
   மகிழுந்தை நிறுத்தியவர் வீட்டிற்குள் நுழைந்தார்.
3. கூண்டுக்குள் கிளியைக் கண்டார்; அதை வானில் பறக்கவிட்டார்.
   கூண்டுக் கிளியைக் கண்டவர் அதை வானில் பறக்க விட்டார்.
4. எனக்குக் கவிதை நூலைத் தருவார்; அவரே அதன் பதிப்பாளர்.
   எனக்குக் கவிதை நூலைத் தரப்போகிறவரே அதன் பதிப்பாளர்.

## திருக்குறள்

**1. பொருளுக்கேற்ற அடியைக் கண்டிபிடித்துப் பொருத்துக**

| | | |
|---|---|---|
| கண்டானாம் தான்கண்டவாறு | - | பகைவரையும் நட்பாக்கும் கருவி |
| அறம்நாணத் தக்கது உளடைத்து | - | தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான் |
| மாற்றாரை மாற்றும் படை | - | அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும். |

**விடை:**

| | | |
|---|---|---|
| கண்டானாம் தான்கண்டவாறு | - | தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான் |
| அறம்நாணத் தக்கது உடைத்து | - | அறம் வெட்கப்பட்ட அவனை விட்டு விலகிப்போகும் |
| மாற்றாரை மாற்றும் படை | - | பகைவரையும் நட்பாக்கும் கருவி |

3. ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

**4. கோடிட்ட இடத்தினை நிரப்புக**

அ) அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் **ஒப்பரவு**
ஆ) உலகத்துக்கு அச்சாணி போன்றவர் **உழவர்**
இ) தான் நாணான் ஆயின் **அறம்** நாணத் தக்கது.
ஈ) ஆழி என்பதன் பொருள் **கடல்**
உ) மாற்றாரை மாற்றும் **படை**
ஊ) ஒழுக்கமான குடியில் பிறந்தவர் **தவறு** செய்வதில்லை

**சிறுவினாக்கள்**

**1. இறக்கும் வரை உள்ள நோய் எது?**

சொன்னாலும் செய்யாமல் தானாகவும் செய்யாமல் இருப்பவன் உயிரானது, சாகும் வரை உள்ள நோய்.

**2. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்**
**இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்கு எழுதுக**

இக்குறளில் ஏகதேச உருவக அணி அமைந்துள்ளது.

அணி இலக்கணம் : ஒரு செய்யுளில் கூறப்படும் இரண்டு கருத்துகளுள் ஒன்றினை உருவகம் செய்து மற்றொன்றினை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவகம் ஆகும்.

விளக்கம் : இக்குறளில் பண்புகளைத் தூண்களாக உருவகம் செய்துள்ள ஆசிரியர் அந்தத் தூண்கள் தாங்கும் மண்டபம் எனச் சான்றாண்மையை உருவகம் செய்யவில்லை. எனவே இது ஏகதேச உருவக அணி ஆயிற்று.

**3. உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?**

உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் உழவர். உழவுத் தொழிலை மேற்கொள்ளாமல் வேறு தொழில்கள் செய்பவர்களையெல்லாம், உழவுத் தொழில் செய்பவர்களே தாங்குவதால் உலகமாகிய தேர் தடுமாறாமல் நிற்கச் செய்யும் அச்சாணி போன்றவர் ஆவர்.

**4. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டானாம் தான்கண்ட வாறு**
**இக்குறட்பாவில் பயின்று வரும் தொடை நயத்தை எழுதுக**

இக்குறளில் பயின்று வரும் தொடை நயம்:

1,2,4 ஆகிய சீர்களின் முதல் எழுத்து 'கா' என இருப்பதால் முதலடியில் கீழ்ப்பதுவாய் மோனை அமைந்திருக்கிறது.

**5. ஒருவன் இன்பங்களில் சிறந்த இன்பத்தை எப்போது பெறலாம்?**

துன்பங்களில் கொடிய துன்பமாகிய 'மாறுபாடு' என்பது ஒருவனது மனத்தில் இல்லையென்றால் அந்தத் தன்மையே இன்பங்களுள் சிறந்த இன்பத்தைக் கொடுக்கும்.

**6. நற்குடியில் பிறந்தவர் வறுமையுற்றாலும் நமது குணத்தில் மாறுபட மாட்டார் என்பதைத் திருக்குறள் எவ்வாறு கூறுகிறது?**

கோடிப் பொருள் அடுக்கிக் கொடுத்தாலும், ஒழுக்கமான குடியில் பிறந்தவர் தவறு செய்வதில்லை எனத் திருக்குறள் கூறுகிறது.

**7. சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் யாவை?**

பிறரிடம் அன்பு, பழிக்கு நாணுதல், அனைவரிடமும் இணக்கம், இரக்கம், உண்மை ஆகிய ஐந்து பண்புகளும் சான்றாண்மை என்னும் மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் ஆகும்.

**8. பகைவரை நட்பாகும் கருவி எது?**

செயல் செய்பவரின் ஆற்றல் பணிவுடன் நடத்தல் ஆகும். அதுவே சான்றோர்க்குப் பகைவரையும் நட்பாக்கும் கருவியாகும்.

**9. சான்றோர் சிறப்பு யாது?**

சான்றாண்மை என்னும் கடலுக்குக் கரைபோன்றவர் ஊழிக்காலம் வந்தாலும் தம்முடைய நற்பண்புகளிலிருந்து மாறமாட்டார்.

**10. ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார் – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.**

இக்குறளில் ஏகதேச உருவக அணி உள்ளது.

அணி இலக்கணம் : ஒரு செய்யுளில் கூறப்படும் இரண்டு கருத்துகளுள் ஒன்றை உருவகம் செய்து மற்றொன்றினை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவகம் ஆகும்.

விளக்கம்: சான்றோரைக் கரையாக உரை செய்துள்ள ஆசிரியர் சான்றாண்மையைக் கடலாக உருவகம் செய்யவில்லை. எனவே இது ஏகதேச உருவக அணி ஆயிற்று.

**11. பழிக்கு நாணாதவர் இழிவு யாது?**

பிறர் வெட்கப்படும் பழிச் செயலைச் செய்வதற்கு வெட்கப்படாதவன் எவனோ, அவனை விட்டு அறம் வெட்கத்துடன் விலகிப் போகும்.

**12. உழவின் சிறப்பு யாது?**

உழவுத் தொழில் செய்வதில் உண்டாகும் இடர்ப்பாடுகளைக் கருதி அதனை விட்டு விட்டு வேறு தொழில்களைச் செய்துவந்தாலும் இந்த உலகம் உழவரை நாடியே செல்கிறது. எனவே உழவுத் தொழிலே சிறந்தது.

**13. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து – இதிற்பயிலும் அணியை விளக்கு**

இதில் **ஏகதேச உருவக அணி** உள்ளது.

**அணி இலக்கணம் :** ஒரு செய்யுளில் கூறப்படும் இரண்டு கருத்துகளுள் ஒன்றை உருவகம் செய்து மற்றொன்றிணை உருவகம் விடுவது ஏகதேச உருவகம் ஆகும்.

**விளக்கம் :** உழவர்களை அச்சாணியாக உருவகம் செய்த ஆசிரியர், உலகத்தில் வேறு தொழில்களைச் செய்பவர்களைத் தேராக உருவகம் செய்யவில்லை. எனவே இது ஏகதேச உருவக அணி ஆயிற்று.

## உரைநடை உலகம்

### சிற்பக் கலை

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. சிற்பிகள் ………………… எனப் போற்றப் பெறுகின்றனர்.

**அ) கற்கவிஞர்கள்** ஆ) சிலை வல்லுநர்

இ) சிற்ப ஓவியர்கள் ஈ) சிற்ப மேதைகள்

2. விழுப்புண்பட்டு இறந்த வீரர்க்கு ………………… எடுப்பது வழக்கம்

அ) சமாதி **ஆ) நடுகல்**

இ) மண்டபம் ஈ) விழா

3. தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் சிற்பக்கலை தொடர்பாக வெளியிட்டுள்ள நூல் ........................

**அ) சிற்பச் செந்நூல்** ஆ) சிற்ப மடல்

இ) சிற்ப மரபு ஈ) சிற்ப மலர்

## 2. சிறுவினாக்கள்

**1. சிற்பத் தொழிற்கு உறுப்பாவன எவை எனத் திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது?**

சிற்பத் தொழிற்கு உறுப்பாவன, கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், கண்ட சருக்கரை, மெழுகு எனத் திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது.

**2. சிற்பங்களின் வகைகளை விளக்குக.**

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம். அவ்வாறின்றி முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம்.

**3. புடைப்புச் சிற்பங்கள் பற்றி விளக்குக**

முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம். இத்தகு சிற்பங்களை அரண்மனைகள், கோவில்கள் போன்ற இடங்களில் காணலாம். குறிப்பாகக் கோவிலின் தரைப்பகுதி, கோபுரம், தூண்கள், நுழைவாயில்கள் சுவர்களின் வெளிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் புடைப்புச் சிற்பங்களைப் பார்க்க முடிகிறது.

**4. எத்தனை நிலைகளில் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன?**

தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

**5. சிற்பிகள் 'கற்கவிஞர்கள்' என அழைக்கப்படுவது ஏன்?**

சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால், அவர்களைக் "கற்கவிஞர்கள்" என்று அழைக்கின்றனர்.

**6. பல்லவர் காலச் சிற்பங்களின் பொதுத் தன்மைகளை எழுதுக**

பல்லவர் காலததில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி, சிங்கம், தாமரை, மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில்

அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.

**7. மாமல்லபுரச் சிற்பங்களின் சிறப்புகளைக் குறிக்க**

பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்சபாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவரிகளின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன.

**8. பாண்டியர் கால குகைக் கோவில்கள் பற்றி எழுதுக**

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம். கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான்கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

**9. சிற்பக் கலை வளர்த்த சோழர்கள் பற்றி எழுதுக**

கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம். இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில், இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பக் கலையின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

**10. பௌத்த சமணச் சிற்பங்கள் குறித்து வரைக**

பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள் புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த (கிடை) நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிப்பட்டனர். சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையனவாக உள்ளன.

சான்றாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பாரைகளிலும் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**11. இன்றைய சிற்பக்கலை குறித்து விளக்குக.**

தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச் சிற்பங்களும் கற்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. செங்கல், பைஞ்சுதை (சிமிண்ட்), கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. வெண்கலம் முதலான உலோகங்களாளும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன. இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்தும் பல துறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது. பெரும் அரங்குகளில், காட்சிக் கூடங்களில், வரவேற்பறைகளில் காணப்படுகிற கலைநயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருள்கள், பரிசுப் பொருள்கள், வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்திமிகு சிற்பங்கள் முதலானவை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறை சாற்றுகின்றன.

## இராவண காவியம்

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. 'இராவண காவியம் காலத்தின் விளைவு' எனக் கூறியவர் …………………

**அ) அண்ணா** ஆ) பெரியார்

இ) மறைமலை அடிகள் ஈ) மு.வ

2. பெண்கள் முகத்தை நோக்கித் தொடர்ந்து ……………………

**அ) தும்பி** ஆ) நிலா

இ) மான் ஈ) மேகம்

3. இராவண காவியம் இயற்றியவர் ……………………

**அ) புலவர் குழந்தை** ஆ) பாரதிதாசன்

இ) முடியரசன் ஈ) பெருஞ்சித்திரனார்

4. வெரீஇ என்பதன் இலக்கணக் குறிப்பு …………………

அ) இன்னிசை அளபெடை **ஆ) சொல்லிசை அளபெடை**

இ) செய்யுளிசை அளபெடை ஈ) மரூஉ

**<u>2. சிறுவினாக்கள்</u>**

**1. குறிஞ்சி நிலத்தின் இயற்கைக் காட்சியைப் புலவர் குழந்தை எங்ஙனம் காட்டுகிறார்?**

அருவிகள் பறையாய் ஒலிக்கும்; பைங்கிளி தானறிந்த இனிய இசையைப் பாடும்; பொன் போன்ற அழகிய மயில் தன் அருமையான சிறகினை விரித்து ஆடும்; இக்காட்சியினைப் பூக்கள் நிறைந்த மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் குரங்கினம் மிரட்சியுடன் பார்க்கும்.

**2. குறிஞ்சி நிலத்தில் எவை மணக்கும்?**

தீயில் இட்ட சந்தன மரக் குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும் உலையிலிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணமும் காந்தள் மலரின் ஆழ்ந்த மணமும் பரவித் தோய்ந்து கிடந்தனால் எல்லா இடங்களிலும் உள்ள பொருள்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

**3. முல்லை நிலத்தில் மான் அஞ்சி ஓடியது ஏன்?**

முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவற்றை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்துக் களத்தில் குன்று போலக் குவித்து வைத்திருப்பர். கதிரடிக்கும் அதிர்வு தரும் ஒசையைக் கேட்டு மான்கள் அஞ்சி ஓடும்.

**4. பாலை நிலத்துச் செந்நாயின் பரிவை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகிறார்?**

கொடிய பாலைநிலத்து வெயிலின் வெப்பத்தைக் தாங்க இயலாத செந்நாய்க்குட்டி வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்ட அதன் தாய் வருந்தியது. குட்டி இளைப்பாற எங்கும் நிழலில்லை. எனவே கடும் வெயிலில் தான் துன்புற்று நின்று, தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது.

**5. பாலை நிலத்துப் பருந்துகள் அஞ்சி ஒடின: ஏன்?**

சிறுவர்கள் நன்கு மணம் வீசும் மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக்காய் நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

**6. மருத நிலத்தின் இயற்கை வளம் பற்றி ஆசிரியர் கூறுவது யாது?**

மலையிடையே தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பும் குளத்து நீரும் முல்லை நிலத்தின் அழகிய காட்டாறும் மருத நிலத்தில் பாய்தோடும். அங்கு நெற்பயிரினைக் காக்கும் வகையில் கரும்பு வளர்ந்து நிற்கும். பெருகி வரும் நீரினைக் கால்வாய்வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும். இத்தகு வளம் நிறைந்த மருத நில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும்.

**7. மருத நிலத்துச் சிறுவர்கள் செயல்கள் யாவை?**

தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும். யானையின் தந்தங்களை அளந்து பார்த்து, அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறுகழல் அணிந்த சிறார்கள் வைக்கோற் போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து அருந்தினர்.

**8. இராவண காவியம் – குறிப்பு வரைக**

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம். இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம்,

போர்க்காண்டம் என ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது. இந்நூல் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது.

**9. இராவண காவியம் காட்டும் குறிஞ்சி நிலத்துச் செய்திகள் யாவை?**

அருவிகள் பறையாய் ஒலிக்கும்; பைங்கிளி தானறிந்த இனிய இசையைப் பாடும்; பொன் போன்ற அழகிய மயில் தன் அருமையான சிறகினை விரித்து ஆடும்; இக்காட்சியினைப் பூக்கள் நிறைந்த மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் குரங்கினம் மிரட்சியுடன் பார்க்கும்.

தீயில் இட்ட சந்தன மரக் குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும் உலையிலிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணமும் காந்தள் மலரின் ஆழ்ந்த மணமும் பரவித் தோய்ந்து கிடந்ததனால் எல்லா இடங்களிலும் உள்ள பொருள்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

**10. முல்லை நிலத்தினை இராவண காவியம் எங்ஙனம் காட்டுகிறது?**

நாகணவாய்ப் பறவைகளும் குயில்களும் அழகுமிக்க வண்டுகளும் பாவிசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில மக்களான ஆயர், முக்கனியும் தேனும் சேகரித்துக் கொண்டு முக்குழல் இசையால் மேயும் பசுக் கூட்டங்களை ஒன்று சேர்த்தனர்.

முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவற்றை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்துக் களத்தில் குன்று போலக் குவித்து வைத்திருப்பர். கதிரடிக்கும் அதிர்வு தரும் ஓசையைக் கேட்டு மான்கள் அஞ்சி ஓடும்.

**11. பாலை நிலத்துக் காட்சிகள் யாவை?**

கொடிய பாலைநிலத்து வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க்குட்டி வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்ட அதன் தாய் வருந்தியது. குட்டி இளைப்பாற எங்கும் நிழலில்லை. எனவே கடும் வெயிலில் தான் துன்புற்று நின்று, தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது.

சிறுவர்கள் நன்கு மணம் வீசும் மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகைப் போன்றிருந்த பாலைக்காய் நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

**12. மருத நிலத்துக் காட்சிகள் யாவை?**

மலையிடையே தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பும் குளத்து நீரும் முல்லை நிலத்தின் அழகிய காட்டாறும் மருத நிலத்தில் பாய்ந்தோடும் அங்கு நெற்பயிரினைக் காக்கும் வகையில் கரும்பு வளர்ந்து நிற்கும். பெருகி வரும் நீரினைக் கால்வாய்வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும். இத்தகு வளம் நிறைந்த மருத நில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும்.

தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து, அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறுகழல் அணிந்த சிறார்கள்

வைக்கோற் போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து அருந்தினர்.

**13. இராவண காவியம் காட்டு நெய்தல் நிலக் காட்சிகள் யாவை?**

தூய ஒழுக்க முறையைப் பின்பற்றுபவர்கள், பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள். அதுபோலத் தாம் வாழும் இடமானது மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவு பவளங்களையும் ஒளி முத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் கொண்டு வந்து குவிப்பர். தும்பியானது கரைரய நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்த் தாமரை மலரையொத்த பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் இருக்கும்.

**இலக்கணக் குறிப்பு**

பைங்கிளி, முக்குழல், முதுவெயில், இளம்குருளை, செந்நாய், முதுநீர், நன்னீர், பெருவிசும்பு, கருமுகில் - பண்புத்தொகைகள்

பருகிய, மருவிய, மன்னிய, பிறந்த, நீண்ட - இறந்த காலப் பெயரெச்சங்கள்

கமழும், நொக்கும் அணைக்கும், அடித்திடும், ஓடும், உயங்கும், பாயும், காக்கும், தேக்கும், பூக்கும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள்

பழமும் தேனும், சாமையும், வரகும் - எண்ணும்மைகள்

ஆர்ப்ப, மருண்டு, குவித்து, கேட்டு, இணைந்து, ஆடிட, விரும்பி, அஞ்சி, அளந்து, பறித்து, பார்த்து, புக்கு, அளவி, உலவி, தொடர்ந்து - எண்ணும்மைகள்

அதிர்குரல், குரைகழல், புனைநிழல், சுரிகுழல், தீர், மதியம் - வினைத் தொகைகள்

பூஞ்சினை - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

தன்னிழல் - ஆறாம் வேற்றுமைத் தொகை

மலர்க்கண்ணி - மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை

மரைமுகம் - உவமைத் தொகை

(மரை, தாமரை என்பதன் முதற்குறை)

வெரீஇ - சொல்லிசை அளபெடை

கடிகமழ் - உரிச்சொல் தொடர்

இருபெரு (விசும்பு) - ஒரு பொருட் பன்மொழி

**பகுபத உறுப்பிலக்கணம்**

பருகிய : பருகு + இ (ன்) + ய் + அ

பருகு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ன் – கெட்டது.

ய் –உடம்படு மெய் சந்தி

மருவிய : மருவு + இ(ன்) + ய் + அ

மருவு – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை; ன் – கெட்டது;

ய் – உடம்படுமெய்; அ – பெயரெச்ச விகுதி

நோக்கம் : நோக்கு + உம்

நோக்கு – பகுதி; உம் – செய்யும் என்னும் வாய்பாடு வினைமுற்று;

விகுதி – (விகுதி எதிர்காலம் காட்டியது)

கமழும் : கமழ் + உம்

கமழ் – பகுதி; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி

(விகுதி எதிர்காலம் காட்டியது)

அணைக்கும் : அணை + க் + கு + உம்

அணை – பகுதி; க் – சந்தி; கு – சாரியை;

உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுன்று விகுதி

(விகுதி எதிர்காலம் காட்டியது)

குறித்து : குவி + த் + த் + உ

குவி – பகுதி; த் – சந்தி த் – இறந்த கால இடைநிலை;

உ – வினையெச்ச விகுதி

கேட்டு : கேள் (ட்) + ட் + உ

கேள் – பகுதி; ள் – ட் ஆனது விகாரம்; ட் – இறந்த கால இடைநிலை;

உ – வினையெச்ச விகுதி

இணைந்து : இணை + த் (ந்) + த் + உ

இணை – பகுதி; த் – சந்தி; ந் – விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;

உ – வினையெச்ச விகுதி

விரும்பி : விரும்பு + இ

விரும்பு – பகுதி; இ – வினையெச்ச விகுதி

(விகுதி இறந்தகாலம் காட்டியது)

பிறந்த : பிற + த் (ந்) + த் + அ

பிற – பகுதி; த் – சந்தி; ந் – விகாரம்; த் – இறந்தகால இடைநிலை;

அ – பெயரெச்ச விகுதி

காக்கும் : கா + க் + கு + உம்

கா – பகுதி; க் – சந்தி; கு – சாரியை; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி

(விகுதி எதிர்காலம் காட்டியது)

பூக்கும் : பூ + க் + கு + உம்

பூ – பகுதி; க் – சந்தி; கு – சாரியை;

உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி

(விகுதி எதிர்காலம் காட்டியது)

களிப்பர் : களி + ப் + ப் + அர்

களி – பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை;

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

பறித்து : பறி + த் + த் + உ

பறி – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை;

உ – வினையெச்ச விகுதி.

அருந்துவார் : அருந்து + வ் + ஆர்

அருந்து – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

குவிப்பார் : குவி + ப் + ஆர்

குவி – பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை;

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

உலவி : உலவு + இ

உலவு – பகுதி; இ – வினையெச்ச விகுதி;

விகுதி இறந்தகாலம் காட்டியது.

தோன்றும் : தோன்று + உம்

தோன்று – பகுதி; உம் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி,

விகுதி எதிர்காலம் காட்டியது.

## கவிதைப் பேழை

### நாச்சியார் திருமொழி

**1. சரியான விடையைத் தேர்வு செய்க**

1. 'மதுரையார் மன்னன்' யார்?

**அ) கண்ணன்** ஆ) செழியன்

இ) பாண்டியன் ஈ) மாறன்

2. 'குடிக்கொடுத்த சுடர்க்கொடி' எனப் போற்றப்படுபவர் ......................

**அ) ஆண்டாள்** ஆ) ஒளவை

இ) காரைக்கால் அம்மையார் ஈ) பொன்முடியார்.

3. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், ……………… பாடிய பாடல் தொகுப்பு

அ) அருணகிரி நாதர் ஆ) ஆண்டாள்

**இ) ஆழ்வார்கள்** ஈ) குமர குருபரர்

## 2. சிறுவினாக்கள்

**1. மணமகன் வருகையை ஆண்டாள் எங்ஙனம் வருணிக்கிறார்?**

ஆடும் இளம் பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்து கொண்டு புதி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான். இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

**2. ஆண்டாள் தமது கனவில் கண்ட திருமணக் காட்சியை எங்ஙனம் கூறுகிறார்?**

மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

**3. ஆண்டாள் கண்ட கனவுக் காட்சிகளைத் தொகுத்துக் கூறுக**

ஆடும் இளம் பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்து கொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்.

மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிட்ட பந்தலின் கீழ், தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

## இலக்கணக் குறிப்பு

கனாக் கண்டேன் - இரண்டாம் வேற்றுமைத் தொகை

வரிசங்கம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

ஏந்தி, கொள்ள, தொட்டு, புகுத, கொட்ட, ஊத, வந்து – வினையெச்சங்கள்

கண்டேன் – தன்மை ஒருமை இறந்தகால வினைமுற்று

தாழ்ந்த – இறந்த காலப் பெயரெச்சம்

கைத்தலம் – இருபெயரெட்டுப் பண்புத் தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

ஏந்தி : ஏந்து + இ

ஏந்து – பகுதி; இ – வினையெச்ச விகுதி (விகுதி – இறந்தகாலம் காட்டியது)

தொட்டு : தொடு (தொட்டு) + உ

தொடு – பகுதி; தொட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது.

உ – வினையெச்ச விகுதி

கண்டேன் : காண் (கண்) + ட் + ஏன்

காண் – பகுதி‘; கண் என்க் குறிகியது விகாரம்;

ட் – இறந்தகால இடைநிலை;

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

தாழ்ந்த : தாழ் + த் (ந்) + த் + அ

தாழ் – பகுதி; த் – சந்தி; ந் – விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

வந்து : வா(வ) + த்(ந்) + த் + உ

வா – பகுதி; வ எனக் குறுகியது விகாரம்; த் – சந்தி; ந் – விகாரம்;

த் – இறந்த கால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

## புணர்ச்சி

**1. புணர்ச்சியாவது யாது?**

புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களாக இருந்தாலும் நிலைமொழி, வருமொழி – வருமொழி, நிலைமொழியாகி நிற்கும். எனவே, இருமொழிகளுக்கு இடையே நிகழ்வதுதான் புணர்ச்சி. ஒரு சொல்லோடு ஒட்டுகளோ, இன்னொரு சொல்லோ இணையலாம். அவ்வாறு இணையும்போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு: மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.

புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொறுத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதன் எழுத்தைப் பொறுத்து உயிர்முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்.

**2. புணர்ச்சி எத்தனை வகை? விளக்குக**

புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப்படுத்தலாம். புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

செடி + கொடி = செடிகொடி

மண் + மலை = மண்மலை

புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும். அவை. தோன்றல், திரிதல், கெடுதல்.

நுழைவு + தேர்வு = நுழைவுத் தேர்வு (தோன்றல்)

பல் + பசை = பற்பசை (திரிதல்)

புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

**3. உடம்படுமெய் எனப்படுவது யாது?**

உயிரை ஈறாக உடைய சொற்களின் முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும். அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும். ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படுமெய் என்று சொல்வர்.

**4. உடம்படுமெய் எழுத்துகள் யாவை?**

ய், வ் என்னும் இரண்டும் உடம்படுமெய் எழுத்துகள் ஆகும்.

**5. யகர எழுத்து உடம்படுமெய்யாகி வரும் இடங்கள் யாவை?**

நிலைமொழியின் ஈற்றில் 'இ, ஈ, ஐ' என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின் முன், பன்னிரெண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு

தீ + எரி = தீ + ய் + எரி = தீயெரி

ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்

**6. வகர உடம்படு மெய் எவ்விடங்களில் வரும்?**

'இ, ஈ, ஐ' தவிர, பிற உயிரெழுத்துகள் நிலைமொழி ஈறாக வரும்போது அவற்றின் முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் வகர மெய் தோன்றும்.

பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்

பா + இனம் = பா + வ் + இனம் = பாவினம்

**7. ஏகார உயிர்முன் உடம்படுமெய் எவ்வாறு அமையும்?**

நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.

சே + அடி = சே + ய் + அடி = சேயடி

சே + வ் + அடி = சேவடி

**8. குற்றியலுகரம் என்றால் என்ன?**

தனிக்குறில் அல்லாது சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து, பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

**9. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? விளக்குக**

சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| வகுப்பு | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| இரும்பு | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| அமிழ்து | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| வரலாறு | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| அஃது | ஆய்தக் தொடர்க் குற்றியலுகரம் |
| பேசு | நெடில் தொடர்க் குற்றியலுகரம் |

**10. குற்றியலுகரப் புணர்ச்சியாவது யாது?**

நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.

எ.கா: வட்டு + ஆடினான் = வட்டாடினான்

**1. எழுத்துவகை அறிந்து பொருத்துக**

1. இயல் – அ) உயிர் முதல் உயிரீறு

2. புதிது – ஆ) உயிர் முதல் மெய்யீறு

3. ஆனி – இ) மெய்ம்முதல் மெய்யீறு

4. வரம் – ஈ) மெய்ம்முதல் உயிரீறு

**விடை: 1 – ஆ, 2 – ஈ, 3 – அ, 4 – இ**

**2. புணர்ச்சிகளை 'முதல், ஈற்றுச்' சொல்வகையால் பொருத்துக**

1. செல்வி + ஆடினாள் – அ) மெய்யீறு + மெய்ம்முதல்

2. பாலை + திணை- ஆ) மெய்யீறு + உயிர்முதல்

3. கோல் + ஆட்டம் - இ) உயிரீறு + உயிர்முதல்

4. மண் + சரிந்தது - ஈ) உயிரீறு + மெய்ம்முதல்

**விடை: 1 – இ, 2 – ஈ, 3 – ஆ, 4 – அ**

**3. சேர்த்து எழுதுக**

அ) தமிழ் + பேசு = தமிழ் பேசு

ஆ) தமிழ் + பேச்சு = தமிழ்ப் பேச்சு

இ) கை + கள் = கைகள்

ஈ) பூ + கள் = பூக்கள்

**4. பொருத்தமான உடம்படுமெய்யுடன் இணைக்க**

| | | |
|---|---|---|
| அ) பூ + இனம் | = பூ + வ் + இனம் | = பூவினம் |
| ஆ) இசை + இனிக்கிறது | = இசை + ய் + இனிக்கிறது | = இசையினிக்கிறது |
| இ) திரு + அருட்பா | = திரு + வ் + அருட்பா | = திருவருட்பா |
| ஈ) சே+ அடி | = சே + வ் + அடி | = சேவடி |

**அ) குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுதுக**

குற்றியலுகரம், முற்றியலுகரம் – வேறுபாடுகள்

**குற்றியலுகரம்**

1. கு,சு,சு,டு,து,பு,று – என்னும் வல்லின உயிர் மெய் எழுத்துகளின் அடிப்படையில் அமையும்.

2. சொல்லின் இறுதியில் வரும்

3. தனிக்குற்றெழுத்து அல்லாத மற்ற எழுத்துகளை அடுத்து அமையும்.

4. சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்து வகைப்படுத்தப்படும்.

**முற்றியலுகரம்**

1. கு, சு, டு, து, பு, று என்னும் ஆறு உயிர்மெய் எழுத்துகள் சொற்களில் தனிக்குறிலை அடுத்து வரும் போது அவை முற்றியல் உகரம் ஆகும்.

2. உகர ஈற்று வல்லின, மெல்லின, இடையினத் தனி உயிர்மெய் எழுத்துகள் முற்றியலுகரம் ஆகும்.

3. சொல்லின் முதலிலும் ஆகும்.

4. ஈற்று அயல் எழுத்தை வைத்து வகைகள் சொல்லப்படுவதில்லை.

**ஆ) இக்காலத் தமிழில் குற்றியலிகரத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறோம்?**

இக்காலத் தமிழில் குற்றியலிகரம் பயன்படுத்தப்படுவதில்லை.

**இ) 'புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுதுவதற்கு உதவும்' – இக்கூற்றை ஆராய்க**

புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுதுவதற்கு உதவும். எப்படி?

சொற்பொருள் மாறுபடாமல் இருக்க உதவுகிறது.

கருத்து + கள் = கருத்துகள் (பன்மை). கருத்துகள் என எழுதினால் கருத்தாகிய கள் எனப் பொருள் தோன்றிவிடும் கருத்துகள் – உருவகம்.

நாள் + கள் = நாள்கள் (பன்மை). நாட்கள் எனக் கூறினால் அன்றைய நாளில் இறக்கிய கள் எனப் பொருள்படும்.

மருந்து + கடை = மருந்துக்கடை. மருந்து விற்கும் கடை

மருந்து கடை எனச் சொன்னால் – எழுதினால் – மருந்தினைக் கடைந்திடு என்னும் பொருள் உண்டாகிவிடும்.

**ஈ) கீழ்க்காணும் பத்தியில் உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.**

தமிழின் 'தொன்மை + ஆன' இலக்கண 'நூல் + ஆகிய' 'தொல்காப்பியம் + இல்' 'சிற்பம் + கலை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடு கல் நடப்படும். 'அ + கல்லில்' அவ்வீரரரின் உருவம் பொறிக்கப்பெறும். 'தமிழக + சிற்பம் + கலை' யின் தோற்றத்திற்கான சான்றாக

'இதனை + கொள்ளலாம்'. சிலப்பதிகாரத்தில் 'கண்ணகிக்கு + சிலை' வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல 'சுதை + சிற்பங்கள் ' இருந்ததை மணிமேகலை மூலம் ' அறிய + முடிகியது'

**விடை:** தொன்மை + ஆன = தொன்மையான. நூல் + ஆகிய = நூலாகிய. தொல்காப்பியம் + இல் = தொல்காப்பியத்தில். சிற்பம் + கலை = சிற்பக்கலை. அ + கல்லில் = அக்கல்லில். தமிழக + சிற்பம் + கலை = தமிழகச் சிற்பக்கலை. இதனை + கொள்ளலாம் = இதனைக் கொள்ளலாம். கண்ணகிக்கு + சிலை = கண்ணகிக்குச் சிலை. சுதை + சிற்பங்கள் = சுதைத் சிற்பங்கள். அறிய + முடியிறது = அறிய முடிகியது.

**உ) கீழ்க்கண்டவற்றுள் புணர்ச்சி வகையினைக் கண்டறிக**

மரக்கிளை – விகாரப் புணர்ச்சி

மூன்று பெண்கள் – இயல்பு புணர்ச்சி

ஆற்றங்கரை – விகாரப் புணர்ச்சி

இரண்டு மாடுகள் – இயல்பு புணர்ச்சி

உழவு செய்தல் – இயல்பு புணர்ச்சி

ஏர் உழவர் – இயல்பு புணர்ச்சி

ஓலைக் குடிசைகள் – விகாரப் புணர்ச்சி

**<u>1. சரியான விடையைத் தேர்வு செய்க</u>**

1. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ...................

**அ) மாமல்லபுரம்** ஆ) பிள்ளையார்பட்டி

இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

2. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி ......................

அ) குறிஞ்சி ஆ) நெய்தல்

**இ) முல்லை** ஈ) பாலை

3. மரவேர் என்பது .................... புணர்ச்சி

அ) இயல்பு ஆ) திரிதல்

இ) தோன்றல் **ஈ) கெடுதல்**

4. 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' – யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ) தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகந்தாள்

**ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்**

5. திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ……………………….

அ) விலங்கு உருவங்கள் **ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்**

இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் உருவங்கள்

## 2. சிறுவினாக்கள்

**1. செப்புத்திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக**

செப்புத் திருமேனி என்பது உலோகத்தினால் செய்யப்படும் இறை வடிவம் ஆகும். சோழர் காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும் மிகுந்த கலை நுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன. சோழர் காலம் செப்புத் திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

**2. நடுகல் என்றால் என்ன?**

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம்.

**3. இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?**

இசைத்தூண்கள் விஜயநகர மன்னர்கள் காலத்தில் அமைக்கப்பட்டன.

**4. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது-**

கண்ணன் புகுந்த பந்தல், முத்துமாலைகள் தொங்கவிடப்பட்ட அழகு உடையதாய் விளங்கியது.

**5. இடிக்குரல் , பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக**

இடிக்குரல் – உவமைத் தொகை. பெருங்கடல் – பண்புத் தொகை

**6. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?**

தூய ஒழுக்க முறையைப் பின்பற்றுபவர்கள், பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள். அதுபோலத் தான் வாழும் இடமானது மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவு பவளங்களையும் ஒளி முத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் கொண்டு வந்து குவிப்பர்.

தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்த் தாமரை மலரையொத்த பெண்களின் முகத்தினை நோக்கிக் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் இருக்கும்.

**7. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?**

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறுலாம். அவ்வாறின்றி முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம்.

**8. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?**

கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர்ச் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தில் உச்சநிலைப் படைப்பு என்று கூறலாம். விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன் அவை படைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

**9. இராவண காவியத்தில் இடம் பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக் காட்டுக**

இராவண காவியத்தில் இடம் பெற்ற இரண்டு உவமைகள்:

தூய ஒழுக்க முறையைப் பின்பற்றுபவர்கள், பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள். அதுபோலத் தாம் வாழும் இடமானது மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவு பவளங்களையும் நல் இயல்பு தோன்றும் ஒளி முத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் கொண்டு வந்து குவிப்பர்.

தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலத்தும். பின்னர்த் தாமரை மலரையொத்த பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் இருக்கும்.

**10. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக**

ஆடும் இளம் பெண்கள், கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும் கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்து கொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்.

மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

**11. குறிஞ்சி மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக**

தீயில் இட்ட சந்தன மரக் குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும் உலையிலிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணமும் காந்தள் மலரின் ஆழ்ந்த மணமும் பரவித் தோய்ந்து கிடந்ததனால் எல்லா இடங்களிலும் உள்ள பொருள்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

**12. கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக**

கைபிடி – கையைப் பிடித்துக் கொள்

கைப்பிடி – கையால் பிடித்துக் கொள்; பொருள்களைப் பிடிப்பதற்குத் துணையாக அமைக்கப்படும் உறுப்பு

கைபிடி – இயல்பு புணர்ச்சி; கைப்பிடி – விகாரப் புணர்ச்சி

**<u>1. மொழி பெயர்க்க</u>**

1. Strength the body - உடலினை உறுதி செய்
2. Love your food - ஊண்மிக விரும்பு
3. Thinking is great - எண்ணுவது உயர்வு
4. Walk like a bull - ஏறுபோல் நட
5. Union is Strength - ஒற்றுமை வலிமையாம்
6. Practice what you have learnt - கற்றது ஒழுகு – புதிய ஆத்திசூடி (பாரதியார்)

**2. மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க**

எட்டாக்கனி : உடும்புப்பிடி, கிணற்றுத்தவளை, ஆகாயத் தாமரை, எடுப்பார், கைப்பிள்ளை, மேளாளத்துடன். (எ.கா) முயன்றால் எந்தச் செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.

எட்டாக் கனி : ஏழைகளுக்கு மருத்துவப் படிப்பு எட்டாக்கனியா?

உடும்புப்பிடி : பெரியார் தம் கொள்கையை உடும்புப்பிடிபோல் பற்றி இருந்தார்.

கிணற்றுத்தவளை : தாங்கள் கற்றதே உயர்வானது எனச் சிலர் கிணற்றுத் தவளையாய் வாழ்கிறார்கள்.

ஆகாயத்தாமரை : இந்த நாட்டைத் திருத்த நினைப்பது ஆகாயத் தாமரையைப் பறிப்பது போன்றது.

எடுப்பார் கைப்பிள்ளை : எவர் சொல்வதையும் ஏற்றுக் கொண்டு எடுப்பார்கைப் பிள்ளையாய்ச் சிலர் வாழ்கிறார்கள்.

மேளதாளத்துடன் : நல்ல நூல் வெளியாகிறது என்றால் மேளதாளத்துடன் வரவேற்க வேண்டும்.

**3. பத்தியில் இடம்பெற்றுள்ள இயல்பு புணர்ச்சிகளைப் விகாரப் புணர்ச்சிகளையும் எடுத்தெழுதுக**

காஞ்சிக் கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் .முழுவதும் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதேபோன்று காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலிலும் பல்லவர்காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வச் சிற்பங்கள் மட்டுமல்லாது பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவுவாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பதுபோன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

இயல்பு புணர்ச்சி : கயிலாசநாத கோவில், அதேபோன்று, நுழைவு வாயில், இருபுறம், நிற்பது போன்று

விகாரப்புணர்ச்சி : சுற்றுச்சுவர், கலைக்கூடம், வைகுந்தப் பெருமாள் காலச் சிற்பங்கள், தெய்வச் சிற்பங்கள், உட்புறச் சுவர், பல்லவர்காலக் குடைவரைக், கோவில், இருபுறங்கள் படைக்கப்பட்டுள்ளன.

**4. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக**

1. இல்லத்தின் அருகே பதிதாகக் கூரை போட்டனர்.

   இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

2. கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.

   கயல் பானை வனையக் கற்றுக் கொண்டாள்.

3. நேற்று தென்றல் காற்று அடித்தது.

   நேற்றுத் தென்றல் காற்று வீசியது.

4. தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்.

   தென்னை மட்டையிலிருந்து நார் உரித்தனர்.

5. அணில் பழம் சாப்பிட்டது.

   அணில் பழம் தின்றது.

6. கொடியிலுள்ள மலரை எடுத்து வா.

கொடியிலுள்ள மலரைக் கொய்து வா.

**5. விடையைத் தமிழ் எண்களில் எழுதுக**

1. பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் – கஅ
2. திருக்குறளின் அதிகாரங்கள் – கஙங
3. சிற்றிலக்கியங்கள் – சுஙிசு
4. சைவத் திருமுறைகள் – கஉ
5. நாயன்மார்கள் – சுஙிந
6. ஆழ்வார்கள் – கஉ

**6. தமிழ் எண்களில் எழுதுக**

1. எண்ணும் எழுத்தும் கண் – இந்தத் தொடரை ஒருவர் 1 2 3 4 1 5 6 7 4 8 2 என்று குறிப்பிடுகிறார். இதே முறையைப் பின்பற்றிக் கீழ்க்காணும் சொற்களை எப்படிக் குறிப்பிடுவார்?

அ) எழுது – 157 ஆ) கண்ணும் – 8 2 3 4

இ) கழுத்து – 8 5 6 7 ஈ) கத்து – 8 6 7

2. என் வகுப்பில் படிக்கும் அனைவரும் புதிய புத்தகம் வைத்திருந்தனர். இராமனும் புதிய புத்தகம் வைத்திருந்தான். எனவே, இராமன் என் வகுப்பு மாணவன் – இக்கூற்று

அ) உண்மை ஆ) பொய் **ஈ) உறுதியாகக் கூற முடியாது**

**7. பொருள் கூறுக**

ஏங்கல் – அஞ்சுதல் கிடுகு – ஒரு பறை

பான்மை - குணம் பொறி – இயந்திரம்

தாமம் - பூமாலை

**8. உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக**

1. மலர்விழி வீணை வாசித்தாள்; கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.

மலர்விழி வீணை வாசித்தாள்; கேட்டவர் இன்ப வெள்ளத்தில் நீந்தினர்.

2. குழலியின் இசையைச் சுவைத்தவர், கடல் போன்ற கவலையிலிருந்து நீங்கினர்.

குழலியின் இசையைச் சுவைத்தவர், கவலைக்கடலிலிருந்து நீங்கினர்.

3. தேன் போன்ற மொழியைப் பவளவாய் திறந்து படித்தாள்.

மொழித்தேனை வாய்ப்பவளம் திறந்து படித்தது.

4. முத்துநகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.

முத்துநகை தன் புருவ வில்லில் மை தீட்டினாள்.

==================

**சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் சிலர்**

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார், வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்.

**பெண்மை – உயர்வு**

**பண்டித ரமாபாய் (1858 – 1922)**



இவர் சமூகத் தன்னார்வலர். தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

winmeen.com

## பெண்மை – புரட்சி



### முத்துலெட்சுமி
(1886 – 1968)

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்

இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.



## யார் இவர்?

பாகிஸ்தானில், பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியபோது மலாலாவின் வயது பன்னிரண்டு (1997).



## தெரிந்து தெளிவோம்

### பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்

ஈ.வெ.ரா. – நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது.

சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் – கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது. காண்க: tavikaspedia.in

### தனித் தமிழில் சிறந்த நீலாம்பிகை அம்மையார் (1903 – 1943)

மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்; இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல்–தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

### கோத்தாரி கல்விக் குழு

1964ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

### சாரதா சட்டம்

பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

### ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் (1906 –1955)

தமிழ், இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

## நூல் வெளி



குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது; கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது; குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும். இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்பிலுள்ள தலைவியின் பேச்சில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பாடப்பகுதியாக உள்ளன.

பாரதிதாசனின் இயற்பெயர் கனக.சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள். இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

## தெரிந்து தெளிவோம் சாதனைக்கு வயது தடையன்று

10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும் பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.

11ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்.

15ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.

16ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.

17ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் அறிவியலாளர் கலீலியோ.



### தெரியுமா?

சிறுபஞ்சமூலத்தின் ஒரு பாடலில் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அது போல, ஒரு பாடலில் மூன்று, ஆறு கருத்துகளைக் கொண்ட அறநூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் அமைந்துள்ளன. அந்நூல்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?



### தெரியுமா?

2009ஆம் ஆண்டு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது. 2010ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

## இன்றும் நிலைபெற்றுள்ள பேரறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகளுள் சில

1. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
2. கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
3. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
4. சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
5. மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை; தமிழுரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை; தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.
6. நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
7. இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
8. இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.
9. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

## நூல் வெளி



வீட்டிற்கோர் புத்தகசாலை என்னும் இப்பகுதி பேரறிஞர் அண்ணாவின் வானொலி உரைத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர். எழுத்தாளரான அண்ணாவைத் 'தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று அழைத்தனர். இவர் சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்பஒளி வரை பல படைப்புகளைத் தந்தவர். அவரது பல படைப்புகள் திரைப்படங்களாயின. தம்முடைய திராவிடச் சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர் இவரே. 1935இல் சென்னை, பெத்தநாயக்கன் பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார். ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம்நாடு, திராவிடநாடு, மாலைமணி, காஞ்சி போன்ற இதழ்களில் ஆசிரியராகவும் குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார். முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார். சென்னை மாகாணத்தைத் 'தமிழ்நாடு' என்று மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்

அண்ணாவின் சிறுகதைத் திறன் – ப.373 – முனைவர் பெ. குமார்.

## தெரிந்து தெளிவோம்

### புகழுக்குரிய நூலகம்

ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன.

உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.

இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது, திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.

கொல்கத்தாவில் 1836ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இது ஆவணக் காப்பக நூலகமாகவும் திகழ்கிறது.

உலகின் மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

## தெரிந்து தெளிவோம்

அன்று என்பது ஒருமைக்கும்

அல்ல என்பது பன்மைக்கும் உரியன.

(எ.கா.) இது பழம் அன்று.

இவை பழங்கள் அல்ல.

எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்

எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்

(எ.கா.) எத்தனை நூல்கள் வேண்டும்?

எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது.

## பகுபத உறுப்பிலக்கணம்

பதம்(சொல்) இருவகைப் படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| **பகுதி** (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| **விகுதி** (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டும். |
| **இடைநிலை** | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| சந்தி | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| விகாரம் | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |



### தெரியுமா?

மணிமேகலையில் காந்தவூசி பற்றிய செய்தி இருக்கிறது. பழங்காலத்தில் திசை அறியக் காந்தவூசியைப் பயன்படுத்தினர் எனலாம்.

### தெரிந்து தெளிவோம்

இராமநாதபுரம் அழகன்குளத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கீறல் கோட்டோவியம் வணிகக் கப்பலைக் குறிக்கிறது. சங்ககாலத் தமிழர்களின் துறைமுகமாகக் கருதப்படும் அழகன் குளத்திலிருந்து ரோம் நகரத்திற்குக் கடல் பயணம் மேற்கொண்ட கப்பலின் மாதிரியாக இது குறிப்பிடப்படுகிறது.



"பல்வேறு நாடுகளிலிருந்து கடல் வழியாகக் கப்பல்கள் மூலம் வந்து இறங்கிய பொருள்களும், வெளிநாடுகளுக்குக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக உள்நாட்டின் பலபகுதிகளில் இருந்தும் வந்துள்ள பொருள்களும் எண்ண முடியாத அளவுக்குக் குவிந்திருக்கும்; புகார் நகரத்தில், காவல் மிகுந்த சுங்கச்சாவடி இருக்கும் சாலையில், சுங்கத் தீர்வையைப் பெற்றுக்கொண்டு, சோழப் பேரரசின் இலச்சினையான புலிச்சின்னத்தை அடையாளமிட்டு வெளியே அனுப்புவதற்காகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் மலைபோல் தோற்றம் தரும்" என்கிறது பட்டினப்பாலை (அடிகள் 124-135).



## தெரியுமா?

பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பல்ஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அது முதல், யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன. அந்தப் பருவக்காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பல்ஸ் என்பதையே சூட்டினர். ஹிப்பல்ஸ் பருவக்காற்று வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று. பொ.ஆ. முதல் நூற்றாண்டில் உரோமப் பேரரசை ஆண்ட அகஸ்தஸ் சீஸர், யவனர் – தமிழர் வணிகத்தை விரிவுபடுத்தினார். உரோமபுரி அரசர்களின் உருவ முத்திரை இடப்பட்ட பழைய நாணயப் புதையல்கள் தமிழ்நாட்டில் சில இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## நூல் வெளி



சிந்து என்பது ஓசைநயத்துடன் பாடக்கூடிய பாவகை. நாட்டுப்புறப் பாடல் அமைப்பிலிருந்து தோன்றிய இவ்வடிவம் சிலப்பதிகாரக் காலத்திலிருந்து வழக்கில் இருக்கிறது. சிந்துவகைப் பாடல்களை ஆராய்ந்தால், அவை சந்தமும் இயைபுத் தொடையும் அமைந்த கண்ணிகளைக் கொண்டவை என்பதை அறிய முடிகிறது. இதே காலத்தில் கும்மிப்பாடல்களும் காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து, நொண்டிச்சிந்து போன்ற சந்தப்பாடல்களும் ஆனந்தக்களிப்பு, தெம்மாங்கு (தென்பாங்கு) முதலிய நாட்டுப்பாடல் வடிவங்களும் புதிய பாவடிவங்களாகத் தோன்றியுள்ளன. பாடப் பகுதியான மதுரை பற்றிய சிந்துப் பாடல் ஆசிரியர் குழுவால் இயற்றப்பட்டது.

## தெரிந்து தெளிவோம்

ஓரெதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வருவது சிந்துப் பாவகையாகும்.

பாரதியார் சிந்து வகையினை அதிகமாகக் கையாண்டிருக்கிறார். அவர் சிந்துக்குத் தந்தை என்று போற்றப்படுகிறார்.

சிந்து என்பது இசைத்தமிழ்ப் பாகுபாடுகளில் ஒன்று. பல்லவி (எடுப்பு), அனுபல்லவி (தொடுப்பு) இன்றிச் சரணங்களுக்குரிய (முடிப்பு) கண்ணிகளுடன் உடைய பாக்கள் சிலவகைச் சிந்துகளில் காணப்படுகின்றன.

சித்தர் பாடல்கள் பல சிந்துவகையில் அமைந்திருப்பதை நாம் காணலாம்.

எ.கா. கடுவெளிச் சித்தரின் 'பாபம் செய்யாதிருமனமே' என்னும் பாடல்.



### தெரியுமா?

"பொறிமயிர் வாரணம் ...

கூட்டுறை வயமாப் புலியொடு குழும" (மதுரைக்காஞ்சி 673 – 677 அடிகள்) என்ற அடிகளின் மூலமாக மதுரையில் வனவிலங்குச் சரணாலயம் இருந்த செய்தியை மதுரைக் காஞ்சியின் மூலம் அறியலாம்.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி – மா. இராசமாணிக்கனார்



### நூல் வெளி

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி. காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள். மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது. இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதைப் 'பெருகுவள மதுரைக்காஞ்சி' என்பர். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.



### தெரியுமா?

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளிச் சந்தை 18 ஏக்கர் பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுகிறது. பல ஊர்களைச் சேர்ந்த மக்கள், தக்காளி முதல் தங்கம் வரை வாங்குவதற்குக் கூடுகிறார்கள். விற்பவரும் வாங்குபவரும் உறவுகளாய்ப் பேசி மகிழும் ஆரவாரம் அங்கே ஒலிக்கிறது. 125 ஆண்டுகள் வயதான அச்சந்தையில் நான்கு தலைமுறை நட்பு நிலவுகிறது. கலப்படமில்லாத பொருள்களை வருவாய் நோக்கின்றி அச்சந்தை இன்றும் விற்பனை செய்கிறது.

பொதியை ஏத்தி வண்டியிலே
பொள்ளாச்சி சந்தையிலே
விருதுநகர் வியாபாரிக்கு – செல்லக்கண்ணு
நீயும் வித்துப்போட்டுப் பணத்த எண்ணு
செல்லக்கண்ணு.

பாடலாசிரியர்: மருதகாசி



## தெரியுமா?

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சிற்பங்களில் சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை மணிமேகலை மூலம் அறிய முடிகிறது.



## தெரியுமா?

தமிழக அரசு, சிற்பக் கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை நடத்தி வருகிறது. அக்கல்லூரியிலிருந்து ஆண்டுதோறும் சிற்பக் கலைஞர்கள் பலர் உருவாகின்றனர். சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலலாம். இக்கலைத்துறையில் மிகுதியான வேலைவாய்ப்புகள் உள்ளன. சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் "சிற்பச்செந்நூல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது.

"இராவண காவியம் காலத்தின் விளைவு. ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப் பொறி. உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" – பேரறிஞர் அண்ணா

கோர்வை/ கோவை : கோ என்பது வேர்ச்சொல். கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி. (எ.கா.) ஆசாரக்கோவை, ஊசியில் நூலைக் கோத்தான்.

### நூல் வெளி

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம். இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது. இந்நூல் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது. தமிழகக் காண்டத்திலுள்ள பாடல்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம்.

பெண்ணின் திருமண வயது 18; ஆணின் திருமண வயது 21 என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### நூல் வெளி

திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவருள் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார். இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" என அழைக்கப்பெற்றார். இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர். ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" ஆகும். இத்தொகுப்பில் ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன. நாச்சியார் திருமொழி மொத்தம் 140 பாடல்களைக் கொண்டது. நம் பாடப்பகுதியின் இரு பாடல்கள் ஆறாம் திருமொழியில் இடம்பெற்றுள்ளன.

## தெரிந்து தெளிவோம் — விருது மாலை

**சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள்**

1970 – அன்பளிப்பு (சிறுகதைகள்) – கு. அழகிரிசாமி

1979 – சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) – தி. ஜானகிராமன்

1987 – முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) – ஆதவன்

1996 – அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) – அசோகமித்ரன்

2008 – மின்சாரப்பூ (சிறுகதைகள்) – மேலாண்மை பொன்னுசாமி

2010 – சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) – நாஞ்சில் நாடன்

2016 – ஒரு சிறு இசை (சிறுகதைகள்) – வண்ணதாசன்

இதேபோல் மற்றவகை இலக்கியப் படைப்புகளுக்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்க.

### சிறுகதை என்பது...

*சிறுகதை என்றால் சிறிய கதை, கொஞ்சப் பக்கங்களில் முடிந்து விடுவது என்பதல்ல; சிறுகதை என்ற பிரிவு இலக்கியத்தில் அதில் எடுத்தாளப்படும் பொருள் பற்றியது; ஒரு சிறு சம்பவம், ஒரு மனோநிலை, மனநிலை ஆகியவற்றை மையமாக வைத்து எழுதப்படுவது; எடுத்து எழுதுவது. சிறுகதையில் சம்பவமோ, நிகழ்ச்சியோ அல்லது எடுத்தாளப்படும் வேறு எதுவோ அது ஒன்றாக இருக்க வேண்டும்.*

*சிறுகதைப் பின்னலில் ஆரம்பம், மத்திய சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகள் உண்டு. சாதாரணமான கதைகளில் இம்மூன்றும் படிப்படியாக வளர்ந்துகொண்டே போகும். சமீபத்தில் எழுதப்பட்ட அமெரிக்க சிறுகதைகளில் பழைய சம்பிரதாயமான ஆரம்பம், முடிவு என்ற இரண்டு பகுதிகளும் கிடையவே கிடையாது. கதை திடீரென்று மத்திய சம்பவத்தின் உச்சஸ்தானத்தில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடைகிறது. இன்னும் வேறு ஒரு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்ற ஒன்று கிடையாது. அதாவது கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்.*

*– புதுமைப்பித்தன்*



## தெரியுமா?

தி. ஜானகிராமன் அவர்கள், தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்னும் தலைப்பில் சுதேசமித்திரன் வார இதழில் எழுதினார். இது 1967 இல் நூலாக வெளியிடப்பெற்றது. ரோம், செக்கோஸ்லோவோக்கியா சென்ற அனுபவங்களைக் கருங்கடலும் கலைக்கடலும் என்னும் தலைப்பில் 1974இல் நூலாக வெளியிட்டார். தமது காவிரிக்கரை வழியான பயணத்தை நடந்தாய் வாழி காவேரி என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். இவரது மற்றுமொரு பயணக்கட்டுரை, அடுத்த வீடு ஐம்பது மைல் என்பதாகும்.



## நூல் வெளி

தி. ஜானகிராமன் தஞ்சை மண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகவும் வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகவும் பணியாற்றியவர். வடமொழி அறிவும் சிறந்த இசையறிவும் கொண்ட இவர்தம் கதைகள் மணிக்கொடி, கிராம ஊழியன், கணையாழி, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களில் வெளிவந்தன. நாவல்களையும் நாடகங்களையும் இவர் படைத்துள்ளார். "அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை" என்னும் கோட்பாட்டைக் கொண்டவர் இவர். தமிழ்க் கதையுலகம் நவீனமயமானதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

செய்தி என்னும் சிறுகதை சிவப்பு ரிக்ஷா என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. மிகவும் உயர்ந்த இசை சிறந்த கலைஞனால் கையாளப்படும்போது சொற்களின் எல்லையைத் தாண்டி இசையின் மூலமாகவே பொருள் கொடுக்கிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது.

தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடை உ.வே. சாமிநாதர், மௌனி, தி.ஜானகிராமன், தஞ்சை பிரகாஷ், தஞ்சை இராமையா தாஸ், தஞ்சாவூர்க் கவிராயர் ஆகியோர்.

## தெரிந்து தெளிவோம்

இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாக வாசித்துக் காட்டக்கூடிய இசைக் கருவிகளில் நாகசுரமும் ஒன்று. மங்கலமான பல நிகழ்வுகளில் இக்கருவி இசைக்கப்படுகிறது. இந்தச் சிறப்பான கருவி 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் வாசிக்கப்பட்டது. 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் இந்தக் கருவி கூறப்படவில்லை. 13ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள எந்தப் பதிவுகளிலும் இந்தக் கருவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. தமிழகப் பழைமை வாய்ந்த கோவில் சிற்பங்களிலும் இந்தக் கருவி காணப்படவில்லை. ஆகவே இந்தக் கருவி 13ஆம் நூற்றாண்டிற்குப் பின் ஏற்பட்டிருக்கலாம் என்று அறியமுடிகிறது. நாகசுரம் என்ற பெயரே சரியானது. நாகசுரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது. வெட்டப்பட்ட ஆச்சா மரத்துண்டுகளை நீண்ட நாள்கள் வைத்திருந்த பிறகே இக்கருவி உருவாக்கப்படுகிறது. எனவே பழைய வீடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஆச்சா மரக்கட்டைகளைக் கொண்டே நாகசுரம் செய்யப்படுகிறது. நாகசுரத்தின் மேல்பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படுகிறது. சீவாளி, நாணல் என்ற புல் வகையைக்கொண்டு செய்யப்படுகிறது.

## தெரிந்து தெளிவோம்

தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து,பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| நாக்கு, வகுப்பு | வன்தொடர்க் குற்றியலுகரம் |
| நெஞ்சு, இரும்பு | மென்தொடர்க் குற்றியலுகரம் |
| மார்பு, அமிழ்து | இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| முதுகு, வரலாறு | உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| எஃகு, அஃது | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| காது, பேசு | நெடில் தொடர்க் குற்றியலுகரம் |